விலை ரூபா 1–50

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY


மலர் 29 ஆடி 6 துல்ஹஜ்தா 25 இதழ் 151
யாழ்ப்பாணம் புதன்கிழமை 22-7-1987

# 'ஈழநாடு' ஸ்தாபகர் கே. ஸி. தங்கராஜா அமரரானார்!

## கொழும்பில் இன்று இறுதிக்கிரியைகள்

(நமது நிருபர்)

'ஈழநாடு' ஸ்தாபகரும், ஸ்தாபனத்தின் நிர்வாகத் தலைவரும், கிழக் இலங்கை கடதாசிக் கூட்டுத்தாபனத்தின் முன்னாள் தலைவருமான திரு. கே. ஸி. தங்கராஜா அவர்கள் நேற்று முன்தினம் கொழும்பில் காலமானார் என்பதை வாசகர்களுக்கு மிகுந்த துயரத்துடன் அறியத் தருகின்றோம்.



சமீப காலமாகவே சுகவீனமுற்றிருந்த திரு. தங்கராஜா அவர்கள் தனியார் மருத்துவ மனையில் சிகிச்சை பெற்று வந்த வேளையில் நேற்று முன்தினம் மாலை 5 30 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

தமது 80வது வயதில் காலமான திரு. தங்கராஜாவின் பூதவுடல் இன்று காலை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படவிருக்கின்றது.

(5ம் பக்கம் பார்க்க)

## அனுதாபச் செய்திகள்:

### நல்லை ஆதீன முதல்வர்

திரு. கே. ஸி. தங்கராஜா அவர்களின் மறைவு குறித்து நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஈழநாடு நிறுவனத்தின் உரிமையாளராகவும், உலகத்தமிழாராய்ச்சி மன்ற உபதலைவராகவும் பணியாற்றி நற்றமிழ் விரும்புவோர் உள்ளங்களிலெல்லாம் உறைந்து சைவத்துக்கும் தமிழுக்கும் பெரும் பணியாற்றிய பெரியார் செயற்கரியன செய்பவர்கள் என்ற வரிசையில் வைத்து அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்ற சைவப் பெரியார், கே. ஸி. தங்கராஜா அவர்களாவார். அவர்களது ஜீவாத்மா எல்லாம் வல்ல பரம்பொருளின் பாதார விந்தங்களைச் சார்ந்து நித்தியானந்த சாந்திநிலை எய்த வேண்டுமென இறையருளை வேண்டுவோமாக.

### யாழ்.ஆயர் அதிவண. தியோகுப்பிள்ளை ஆண்டகை

"தமிழ்மக்களுக்கென ஒருபத்திரிகை வேண்டுமென்ற தீர்க்கதரிசனத்துடன் பல இன்னல்களின் மத்தியில் "ஈழநாடு" பத்திரிகையை ஆரம்பித்த தமிழ்ப்பெரியாரின் மறைவு தமிழ் மக்களுக்கும், பத்திரிகை உலகுக்கும் பேரிழப்பாகும்".

(5-ம் பக்கம் பார்க்க)

### யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன்:

"ஈழத்தில் தமிழ்பேசும் மக்களின் மதிப்பிற்குரிய இடத்தை வகித்தவர் அமரர் கே. சி தங்கராஜா. கடந்த பல ஆண்டுகளுக்கு மேலாக தமிழரின் பொருளாதார, கலை, இலக்கிய துறைகளில் இவர் பெரும்பங்கு கொண்டிருந்தார். இவரின் மறைவு தமிழ்மக்களுக்கு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்".

(5-ம் பக்கம் பார்க்க)

### யாழ். அரசஅதிபர் மு.பஞ்சலிங்கம்

ஈழத்தின் தமிழ் பத்திரிகைத்துறை வரலாற்றின் முன்னோடியாகத் திகழ்ந்த அமரர் கே. ஸி. தங்கராஜாவின் அளப்பரிய சேவையை எவராலும் இலகுவில் மறந்துவிட முடியாது" (5ம் பக்கம் பார்க்க)

### ஆணையாளர் சி வீ.கே. சிவஞானம்

"சைவத்துக்கும் தமிழுக்கும் அரும்பெருந் தொண்டாற்றி தமிழ்மக்களின் குறிப்பாக யாழ். மக்களின் நெஞ்சில் குடிகொண்டிருந்த "ஈழநாடு" பத்திரிகையின் ஸ்தாபகர் கே. ஸி. தங்கராசாவின் மறைவு பேரிழப்பாகும்". (5-ம் பக்கம் பார்க்க)

### வண்ணை செந்தில் கதிர் வேலாயுத சுவாமிகோவில் அறங்காவலர் சபை

மறைந்த பெரியார் கே. ஸி. தங்கராஜா அவர்கள், நாட்டுக்கோட்டை நகரத்தார் விட்டுச்சென்ற வண்ணை செந்தில் கதிர்வேலாயுத சுவாமி திருக்கோவிலை மனமுவந்து பொறுப்பேற்று அறங்காவலர் சபை ஒன்றை அமைத்து திருக்கோவில் திருப்பணி வேலைகளை சிறப்புற நடாத்தியவர். (5-ம் பக்கம் பார்க்க)

---

## இலங்கை இனப்பிரச்னை—

# தீர்வு முயற்சிகளில் இந்திய ராஜதந்திர வட்டாரங்கள் தீவிரம்!

## தமிழகத்தில் கே. பி. எஸ். மேனன்

(சென்னை)

**இலங்கை இனப்பிரச்னைக்குத் தீர்வொன்றைக் காணும் முயற்சிகளில் இந்திய உயர்மட்ட ராஜதந்திர வட்டாரங்கள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன. இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. கே. பி. சங்கர் மேனன் சென்னையில் தமிழக முதலமைச்சரையும், இலங்கைத் தமிழ் அரசியல் பிரமுகர்கள், மற்றும் போராளிகள்குழுக்களையும் சந்தித்தார். இவருக்கு உதவியாக இலங்கையிலுள்ள இந்திய ஸ்தானிகர் ஜே. என். டிக்ஸிற், முதலாவது செயலாளர் எச். எஸ். பூரி ஆகியோரும் இருந்து வருகின்றனர்.**

திரு. கே. பி. சங்கர்மேனன் இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு குறித்து தமிழகமுதலமைச்சர் எம். ஜி. இராமச்சந்திரனுடன் நேற்று நீண்ட நேரம்வரை உரையாடினார். இலங்கைக்கான இந்திய ஸ்தானிகர் ஜே. என். டிக்ஸிற் அவரது முதலாவது செயலாளர் திரு. எச் எஸ் பூரி ஆகியோரும் இச்சந்திப்பின் போது உடனிருந்தார்.

தமிழக தலைமைச்செயலகத்தில் இச்சந்திப்பு இடம்பெற்றது. தமிழக முதலமைச்ருக்குத் துணையாகதமிழகஉணவுத் துறை அமைச்சர் திரு எஸ். இராமச்சந்திரனும் இப்பேச்சுவார்த்தையில் பங்குபற்றினர்.

இந்திய ஸ்தானிகர் திரு.டிக்ஸிற, கொழும்பில் இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர்களான திரு. லலித் அத்துலத்முதலி, திரு. எஸ். தொண்டமான், திரு. காமினி திஸநாயக்கா ஆகியோருடன் கடந்த வாரம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரம் தமிழக முதல்வரிடம் இச்சந்திப்பின் போது திரு. மேனனால் எடுத்துக்கூறப்பட்டது.

தமிழக முதல்வருடன்பேச்சு நடத்தியதிரு மேனன்கோஷ்டி பேச்சுவார்த்தை விபரங்கள் குறித்து பிரதமர் திரு. ராஜீவ் காந்தியிடம் தெரிவிப்பதற்காக நேற்றையதினமே புதுடில்லி விரைந்தது.

## "நல்லமுடிவுகளை எடுக்கலாம் என நம்புகிறோம்" – மேனன்

(சென்னை)

"இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு நடவடிக்கைகளில் சில நல்ல முடிவுகளை விரைவில் எடுக்க முடியுமென நம்புகிறோம்" என்று இந்திய வெளியுறவுச் செயலாளர் திரு. கே. பி. சங்கர்மேனன் தெரிவித்துள்ளார்.

நேற்று தமிழகமுதலமைச்சர் திரு எம் ஜி. ராமச்சந்திரனை சந்தித்தபின்னா பத்திரிகையாளரிடம் இச்சந்திப்புக் குறித்து திரு.மேனன் கருத்து வெளியிட்டார். அப்போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு மேனன் தொடர்ந்து தெரிவித்ததாவது:

(5ம் பக்கம் பார்க்க)

## தமிழ்க்குழுக்களுடன்சந்திப்பு

[சென்னை]

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வு தொடர்பாக திரு. கே. பி. எஸ். மேனன் குழுவினர் இலங்கைத் தமிழ் அரசியல். மற்றும் போராளிகள் குழுக்களைச் சேர்ந்த பிரமுகர்களையும் சென்னையில் நேற்றுச் சந்தித்தனர்.

இச்சந்திப்பின்போது தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களான செயலாளர் திரு. அ அமிர்தலிங்கம், திரு. இரா. சம்பந்தன், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர் டாக்டர் பாலசிங்கம், ஈ. பி. ஆர். எல். எப்.பிரதிநிதி எஸ். கேதீஸ்வரன், போராளிகள்

(5-ம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

'ஈழநாடு' ஸ்தாபனத்தின் தலைவர் திரு.கே.ஸி. தங்கராஜா அவர்களின் மறைவையொட்டி அவருக்கு அஞ்சலிசெலுத்து முகமாக இன்று 'ஈழநாடு' காரியாலய பணிகள் யாவும் நிறுத்தப்பட்டிருக்கும். எனவே நாளை மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது என்பதை அறியத் தருகின்றோம். வெள்ளிக்கிழமை 'ஈழநாடு' வழமைபோல் வெளிவரும்.

நிர்வாகி,
ஈழநாடு.

## கோட்டையிலிருந்து சூடு:

# சிங்களவர் உட்பட மூவர் காயம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கோட்டை இராணுவ முகாமிலிருந்து நேற்றுமுன்தினம் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் சிங்களவர் ஒருவர் உட்பட மூவர் படுகாயமடைந்துள்ளனர்.

மத்தியூஸ் வீதியை சேர்ந்த நொமிஸ் பெரேராஜோன்பியதாஸ (வயது 47) என்பவர் காயமடைந்தார். இவர் அத்துருகிரிய என்ற சிங்களக் கிராமத்தைச் சேர்ந்தவர் சிறுபிராயத்திலேயே யாழ்ப்பாணம் வந்து மத்தியூஸ்

(5ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

## வாடகைக்கு

பாடசாலை மாணவர்க்கு அறை வாடகைக்கு உண்டு தொடர்புகொள்ளவும்: 29/3, றக்கா ரேரட், யாழ்ப்பாணம்.
சி-9963

## சேவை

பிரபல சோதிட நிபுணர் கெ. தங்கராசா அவர்களை தினசரி காலை 9 மணி முதல் 1 மணிவரை கந்தர்மடம் திருவள்ளுவர்சாலையிலுள்ள வை. எம். டி ஏ. பணிமனையில் சந்திக்கலாம். சி-9959

முதலாம் குறுக்குத் தெருவில் இயங்கிவந்த யாழ். சைனீஸ் றெஸ்ரோறன்ற் தற்போது 168, கோவில் வீதியில் இயங்கிக்கொண்டிருக்கிறது. கைலாய பிள்ளையார் கோவில் சந்தியிலிருந்து கோவில் வீதித் தெற்குப்பக்கமாக நூறு யார் தொலைவில் உள்ளது].
[சி-9922]

## தேவை

நல்லநிலையில் சொந்தக்காரரிடமிருந்து வெஸ்பா ஸ்கூட்டர் (Vespa) அல்லது C 90 நேரில் கொண்டு வரவும். தொடர்பு: 23, கச்சேரி நல்லூர் வீதி, சுண்டிக்குளி. (தபால் கந்தோருக்கு அருகாமையில்), யாழ்ப்பாணம்.
சி-9961

பிடவைக்கடைக்குத் தேவையான நல்ல நிலையில் இருக்கும் அலுமாரி (Fittings) உடனடியாகத்தேவை. தொடர்புகொள்ளவேண்டிய முகவரி: கமலேஸ்வரி ஸ்ரோர்ஸ், 119/3 மைலண்ட்ஸ் கட்டிடம், கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். சி-9946

## FOR SALE

Type writer portable for sale. Sivaloganathan, near Y. M. H. A., Thirunelvely junction. [9967]

## விற்பனைக்கு

ஹொண்டா C90 விற்பனைக்குண்டு. எந்நேரத்திலும் பார்வையிடலாம். நாதன், 40, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
சி-9960

சிங்கர் Zig Zag, Usha Zig Zag தையல் மெசன்கள், கசற்றேடியோக்கள், Show case, பெல்ஜியம் கண்ணடி மேசைகள், Office மேசைகள், ஹோல் செற், Meet Safe, அல்மாரி, கட்டில் மற்றும் பலவித வீட்டுப்பாவனைப் பொருள்கள் மிகவும் மலிவுவிலையில் உடன் விற்பனைக்குண்டு. M. தியாகராஜன், 326, பிரதானவீதி, யாழ்ப்பாணம். (சென்பற்றிக்ஸ் சந்தியருகில்).
சி-9943

## தவறிவிட்டது

மார்க்கண்டு தங்கரத்தினம் என்பவருடைய அடையாளட்டையும் இல 12889 கொண்ட பாஸ் புத்தகமும், 15-07-87 அன்று சுன்னாகத்திற்கும் மல்லாகச் சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பரணி கூல்பார், மல்லாகம், கோட்டடி, மல்லாகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்தசன்மானம் வழங்கப்படும். சி-9965

## மணப்பந்தல்

தற்சமயம் இங்கு வந்திருக்கும் அவுஸ்திரேலியாவில் ஓர் பிரபல கார்க் கம்பனியில் Assistant Mechanic ஆக கிழமைக்கு 280 டொலர் சம்பளத்தில் வேலைசெய்யும் 31 வயதுடையவருக்கு இந்து வேளாள குலத்தைச் சேர்ந்த மணப்பெண் உடன் தேவை. அங்கு வேலை செய்யக்கூடிய தகைமை உடையவராக இருத்தல் வேண்டும். சாதகம், கல்வித்தகைமை, சீதனம், குடும்ப விபரங்களுடன் உடன் விண்ணப்பிக்கவும். விபரங்கள் அந்தரங்கமாகப் பேணப்படுவதுடன் பொருத்தமற்றவை திருப்பி அனுப்பப்படும். விளம்பர இல: 9925, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [சி-9925]

## 3-ம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
இ. பராசத்தி (தேவி)
தோற்றம்: 04-02-1945
மறைவு: 22-07-1984

உங்கள் அன்பு முகம் காணவில்லை. என் அஞ்சலியை நான் செலுத்துகிறேன் மறவாமல்.
மகள்: லாவண்யா.

மழலைகள் இல்லாதுமனக்குறைகள் பல பட்டாய் மழலையென வந்தபோது காணாமல் போய் விட்டாய். உங்கள் ஆத்மா சாந்தியடைய தேவி கருமாரியம்மனை வேண்டும்: தாய், தந்தை, சகோதரர்.

கருமாரி மோட்டோர்ஸ்.
சி-9958

## 31-ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர்கள்
பொன்னையா
கிருஷ்ணபிள்ளை

கிருஷ்ணபிள்ளை
மாணிக்கம்


வியாழாவத்தை நெல்லியடியைச் சேர்ந்த பொன்னையா கிருஷ்ணபிள்ளை ஓவசியரும், அவரதுமனைவி மாணிக்கமும் கடந்த 5-7-87 நடந்தஅன்றுநெல்லியடி இராணுவ முகாம் தாக்குதலின் போது அகால மரணமடைந்துவிட்டார்கள். அன்னாகளது அந்தியேட்டிக் கிரியைகள் விசுவமடுவில் சுப்பிரமணியம் இராசேந்திரன் இல்லத்தில் 4-8-87 செவ்வாய்க்கிழமை நடைபெறவிருப்பதால் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் வந்து கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அன்னார்களின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள், மைத்துனர்கள்.
சி-9956

## விற்பனைக்கு

"சன்யோ" ஸ்பீக்கர் 2, ரேடியோரோன் 15W ஸ்பீக்கர் 2, மின்சார நீர் இறைக்கும் யந்திரம் ¾" கோம் மேட், நெல்மெட் யப்பான் உற்பத்தி, அன்றினு றெட்டா, றேயல் ஆங்கில தட்டச்சு தொடர்பு; றெலி வோய்ஸ் என்ஜினியேர்ஸ், 184A, நாவலர்றேட், யாழ்ப்பாணம். [சி-9871]

புதிய Sony T V 2092 ME, யூஸ்வைக்கும் பெட்டி, பலவித கட்டில்கள், மேசைகள், தொட்டில்கள், Screen Electric Cooker, with oven, Type writer, Ceiling fan, Ice Creambeaters Play pen, Amplifer மற்றும் பல பொருள்கள் விற்பனைக்குண்டு பத்மநாதன், பிறிமல்டி சேவிஸ், திருநெல்வேலி வடக்கு. சி-9966

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



து. பஞ்சலிங்கம்
(மனேமாஸ்டர்)
தோற்றம்:
09- 04- 1956
அழிப்பு:
22- 07- 1984

துப்பாக்கிகளிடம்
நியாயம் கேட்டோம்
அதற்கென்ன தெரியும்
உன் இதயத்தை
பிளந்து பார்த்து
தீர்ப்பு வழங்கியது-
இதோ!
இருண்ட தெருவழியில்
பள்ளங்கள் தெரியாது
தவித்த பட்டினிவிழிகள்
சுடர்கள் கண்டு
புறப்பட்ட பாதை-
அந்தோ!
குருதிவெள்ளம்
வழிமறிக்கிறது
குரல்வளைகள்
நெரிகின்றன
முனகல்கூட கேட்க
வில்லை
விடுதலை வேள்வியில்
வெந்த விழிகள்
கண்ணை மூடின-
எங்கோ!
அச்சமில்லை! அச்சமில்லை!
கவிதை வரிகள்
காதை பிளக்கின்றன.
அமைதிகொள் தோழா!

குடும்பத்தினர், உறவினர், ஊர்மக்கள், நண்பர்கள்.
கொம்மந்தறை,
வவ்வெட்டித்துறை
(சி- 9962)

# இன்றும், நாளையும் காங்கேசன்துறையில் உணவு முத்திரை வழங்கப்படும்

யாழ்ப்பாணம, புதன்
காங்கேசன்துறை கிராம சேவகர் பகுதியில் உணவுமுத்திரை பெறத் தகுதிஉடையவர்களுக்குஇன்று புதன்கிழமையும், நாளை வியாழக்கிழமையும் உணவு முத்திரைகள் விநியோகிக்கப்படவிருப்பதாக கிராம சேவையாளர் திரு. மு. கனகநாயகம் அறிவித்துள்ளார்.

இந்த உணவுமுத்திரைகள் யாவும் துர்க்கை அம்மன் ஆலயத்தில் வைத்து வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (வா)

## கால்நடைகள் திருட்டு

பலாலி, செவ்
மயிலிட்டி, தையிட்டி, ஊறணி, மாவிட்டபுரம் ஆகிய இடங்களில் தினமும் கால்நடைகள் திருடப்பட்டு வருகின்றன.

இப்பகுதி மக்கள் வீடுகளை விட்டு வெளியேறியபோது கால்நடைகளை விட்டுச் சென்றனர். இவ்விதம் கைவிட்டுச் சென்ற கால்நடைகளை இவ்வாறு தினமும் திருடப்பட்டு வருகின்றன

## 'மக்களுக்கு உதவ முன்வரவேண்டும்'

யாழ்ப்பாணம், புதன்
'இன்றை நெருக்கடியான காலகட்டத்தில் மக்களுக்கு உதவுவதில் கிராசேவையாளர்கள் பின்நிற்காமல் முன்வர வேண்டும்'

யாழ் செயலகமண்டபத்தில் நடைபெற்ற கிராமசேவை அலுவலர்களின் இருநாள் கருத்தரங்கொன்றை ஆரம்பித்துவைத்துப்பேசிய யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இக்கருத்தரங்கில் விசேட சேவை உத்தியோகத்தராக இருந்து கிராமசேவை அலுவலர்களாக பதவிமாற்றம் பெற்ற 78 பேர் கலந்துகொண்டார்கள் [வா]

## மூன்றுமாண்டு நினைவஞ்சலி



திருமதி
பராசக்தி (தேவி)
இராசரத்தினம்

அன்புக் கணவன்,
அருமை மகள்.
"மதி வாசம்",
மீசாலை தெற்கு,
மீசாலை. ஏ-1944

## விசாரணையின் பின்னர் விடுதலை

[பண்டத்தரிப்பு நிருபர்]
மதவாச்சிக்கு டீசல் பெறச் சென்றபோது அங்குவைத்து பொலிசாரினால் கைது செய்யப்பட்ட வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் காரைநகர்டிப்போபாதுகாப்பு உத்தியோகத்தர் திரு எஸ் கஜேந்திரன் விடுதலை செய்யப்பட்டுள்ளார்

காரைநகர் டிப்போவுக்கு தேவையான டீசலை பெறுவதற்காக மதவாச்சிக்கு சென்றபோது சந்தேகத்தின்பேரில் அங்கு வைத்து பொலிசாரினால் இவர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டார்

காரை நகர்டிப்போபொறுப்பதிகாரியும், வடபிராந்திய போக்குவரத்துசபையின் உயர் அதிகாரிகளும் இது விடயமாக மேற்கொண்ட துரித நடவடிக்கையை அடுத்து விசாரணையின் பின்பு அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

# இன்றைய பலன்

திகதி: 6- (22- 7-87)
மாதம்: ஆடி
கிழமை: புதன்
திதி: துவாதசி
நட்சத்திரம்: ரோகினி மேல் மிருகசீரிடம்.

மேடம்: நிதியில் முடக்கம் ஏற்படும், குடும்பத்திலும் விரக்தி தோன்றும், பொருள் நழுவக்கூடும், அவதானம். வேண்டும்.

இடபம்: எதிலும் நிறைவு காண்பீர்கள், சிலருக்கு வாழ்வும் கிட்டும், வருமான விருத்தியுண்டு.

மிதுனம்: நாள் எல்லாம் அலைச்சல், பிணிக்கு இடம் கொடாது நடக்கவும், கழுகுப் பார்வை வட்டமிடும்.

கடகம்: சிலர் அரசியல் துறையிலும் அடியெடுத்து வைப்பர். பூமிலாபம் உண்டு, சிலருக்கு பதவியுயர்வுக்கும் இடமேற்படலாம்.

சிங்கம்: தங்கக்குணம் மேலிடும், தக்கமதிப்பும் கிட்டும், இல்லச்சிறப்புண்டாம்.

கன்னி: வாழ்வுப்பயணத்தில் வளமான திருப்பம் ஏற்படும், தொழில் முன்னேற்றம் உண்டு, தொல்லைகள் நிவர்த்தியுண்டாம்.

துலாம்: அவசரம் வேண்டாம், விஷபீடையுண்டு, நில் நிதானி அமைதி உன்காலடியில்.

விருச்சிகம்: தொல்லைகள் அலைமோதும், மனநிம்மதியைத் தேடி அலைவீர்கள், வைத்தியச் செலவுகளும் அதிகரிக்கும்.

தனுசு: உறவுகள் பலப்படும். அன்னியர் உதவியுண்டு, கல்வி முன்னேற்றம் உண்டாம்.

மகரம்: நினைத்ததில் தடை, நிம்மதி பறக்கும், அதிக சிந்தனையைத் தவிர்கவும்.

கும்பம்: எதிரிகள் பணிவர், எதிலும் வெற்றி காண்பீர்கள், கண்ணியமான வாழ்வும் உண்டாம்.

மீனம்: இதயச்சுமை அகலும், இல்லச் சிறப்புமுண்டாம், பொன்பொருள் விருத்தியுண்டாம்:

திருமலை
வே. ரவீந்திரன்


எமது சென்றவார
புதிய வெளியீடுகள்

1. வண்ணக் கனவுகள்
2. தாயின் கட்டளை
3. பேர் சொல்லும் பிள்ளை

இன்றைய வெளியீடு

பாண்டியராஜன் ★ சித்ராங்கி ★ சரிதா
"ஏட்டிக்கி போட்டி"

குணம் வீடியோ சென்ரர்
42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23665
[ஏ 1945]

★ இந்தியாவில் ராஜீவும் ★ பாகிஸ்தானில் ஸியாவும் ★ பங்களாதேஷில் எர்ஷாத்தும்

# பதவி விலகவேண்டுமெனக் கோரி பெரும் ஆர்ப்பாட்டங்கள்

புதுடில்லி, ஜூலை—21

**தெற்காசியப் பிராந்திய வல்லரசுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷில் ஆட்சித் தலைவர்கள் உடனடியாகப் பதவி விலக வேண்டுமெனக் கோரி எதிர்க் கட்சிகளும், பொதுமக்களும் பெரும் வன்முறை ஆர்ப்பாட்டங்களில் இறங்கியுள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் இக்கோரிக்கை தீவிரமடைந்துள்ளது.**

இந்த நாடுகளின் ஆட்சியில் எழுந்துள்ள நெருக்கடிநிலைகள் இவ்வெதிர்ப்பாளர்களுக்குச் சாதக நிலைமையைக் கொடுத்துள்ளதையடுத்தே போராட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

### இந்தியாவில்

ஹரியானு தேர்தல் தோல்விகளின்பின் இந்திரா காங்கிரஸ் கட்சியில் பலகாலமாக இருந்து வந்த கருத்து வேறுபாடுகள், அதிருப்திகள் தற்போது பெருமளவில் வெடித்துள்ளன கட்சியின் சில பலவீனங்களைப் பயன்படுத்திப் பொறுப்புவாய்ந்த உறுப்பினர்கள் மோசடிகளில் ஈடுபட்டுவருவதைச் சுட்டிக்காட்டிய திரு. வி பி சிங்கின் அமைச்சர் பொறுப்பு ராஜினுமாவே தேர்தலுக்கு முன் கட்சியைப் பெரிதும் பலவீனப்படுத்தியது

இதனையடுத்து எழுந்த ராஜினுமாக்கள், பதவி நீக்கங்கள், கட்சி எதிர்ப்புப் பிரசாரங்களையும் நாட்டில் தோன்றியுள்ள கலவர நிலைகளையும் காரணங் காட்டி ஜனதாக் கட்சியும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும் இவற்றின் ஆதரவாளர்களும் ராஜீவ் காந்தி பதவி விலக வேண்டுமெனவும், பொதுத் தேர்தல் நடைபெறவேண்டுமெனவும் கோரி பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

### பாகிஸ்தானில்

கராச்சியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பும், அயல் நாடுகளுடனன உறவுகளில் ஏற்பட்ட விரிசல் நிலை குறித்தும்

உலகச் செய்திகள்

பாகிஸ்தானின் முக்கிய நகரங்களில் எதிர்க் கட்சிகளும், பொதுமக்களும் பெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர் இவ்வார்ப்பாட்டங்களில் கடைகள், பஸ்கள், பொதுச் சொத்துக்கள் சேதமாக்கப்பட்டன.

அதிபர் ஜெனரல் ஸியாவுல் ஹக்கும் பிரதமர் மொகமட் கான் ஜுனேஜோவும் உடனடியாகப் பதவி விலகவேண்டும் என்பதே இவர்கள் கோரிக்கை தமது கோரிக்கைகள் நிறைவேறும்வரை போராட்டம் தொடருமெனவும் அவர்கள் தெரிவித்துள்ளன.

### பங்களாதேஷில்

கடந்த வாரம் அதிபர் எர்ஷாத் தனது ஆட்சியில் இராணுவ தரப்பினருக்கு அளித்துள்ள சில முக்கிய பங்குகள் பங்களாதேஷில் பெரும் கலவரமாக வெடித்துள்ளது இதனை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நாளை முதல் 54 மணி நேர வேலைநிறுத்தல்தில் ஈடுபடவுள்ளன

இதுவரை அதிபர் எர்ஷாத்துக்கு எதிரான எந்தவொரு போராட்டத்திலும் ஒன்றிணையாத அனைத்து எதிர்க்கட்சிகளும் இம்முறை இணைந்திருப்பது போராட்டத்திற்குப் பெரும் பலமாக அமைந்திருப்பதாகக் கருதப்படுகிறது. [சி]

---

# ஜனதிபதி வெங்கட்ராமன் பதவியேற்பு வைபவம்

(புதுடில்லி)

இந்தியாவின் எட்டாவது ஜனதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் திரு. ஆர் வெங்கட்ராமன் எதிர்வரும் சனிக்கிழமை 25-ம் திகதி நண்பகல் 12-45 மணிக்கு பதவியேற்கவுள்ளார்

கோலாகலமான இந்த நிகழ்ச்சி பாராளுமன்றத்தின் மையப்பகுதியில் நடைபெறும். இதற்காக ஜனதிபதி மாளிகையும் பாராளுமன்ற மத்திய மண்டபமும் அழகுபடுத்தப்பட்டுவருகிறது. இந்திய தலைமை நீதிபதி திரு. ஆர் எஸ் பாத்தத் பதவிப் பிரமாணம் செய்துவைப்பார்.

இதேவேளை தற்போதைய ஜனதிபதி திரு. ஜியானி ஸெயில் சிங் 24-ம் திகதி வெள்ளிக்கிழமை நாட்டு மக்களுக்கு ஆற்றும் இறுதி பிரியாவிடை உரை வானெலி, தொலைக்காட்சிகளில் ஒரே நேரத்தில் ஒலி, ஒளிபரப்பப்படவுள்ளது

## கிளர்ச்சியாளர் தாக்குதல் 6 லட்சம் மக்கள் பலி

கபூல், ஜூலை 21

ஆப்கானிஸ்தானில் சோவியத் சார்பு கம்யூனிஸ்ட் அரசுக்கெதிராக போராடிவரும் முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் கடந்த எட்டுவருடங்களில் சுமார் ஆறு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்களை கொன்றுள்ளனரென சோவியத் செய்தி நிறுவமனமான 'டாஸ்' தெரிவித்துள்ளது.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் பொதுமக்களும், ஆப்கான் இராணுவத்தினரும். சோவியத் இராணுவத்தனரும் அடங்குவரென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆப்கான் அரசு எதிர்ப்பு கிளர்ச்சிப் படையினருக்கு அமெரிக்காவும் அதன் சார்பு நாடுகளும் வெளிப்படையாக ஆயுத உதவிகள் அளித்துவருவதும் குறிப்பிடத்தக்கது

## ஆசியாவில் எய்ட்ஸ்?

[ஜெனிவா, ஜூலை 21]

ஆசியப் பிராந்தியத்திலுள்ள 280 கோடி மக்கள் எய்ட்ஸ் நோயினுல்பீடிக்கப்படுவதிலிருந்து விலகியுள்ள போதிலும் சில நாடுகளில் இந் நாய் விரைவாக பரவக்கூடுமென்று 'எய்ட்ஸ்' நோய் நிபுணர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர்.

கடந்த மாதம்வரை உலக நாடுகளில் சுமார் 52,000 பேர் 'எய்ட்ஸ்' நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர் ஆனல் ஆசியப் பிராந்தியத்தில் 157 பேர் மாத்திரமே இந்நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர்

இவ்வாரம் சிட்னியில் நடைபெறவிருக்கும் 'எய்ட்ஸ்' நோய் ஆபத்துப்பற்றிய கருத்தரங்கொன்றில் உலக நாடுகளின் சுகாதார அமைச்சர்கள் பங்குபற்றவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## நஷ்டஈடு கோருகிறுர் முன்னுள் அதிபர் மார்க்கோஸ்

ஹவாய், ஜூலை 21)

பிலிப்பைன்ஸில் தனது 20 வருட ஆட்சியின் போது அரசாங்கசொத்துக்களைகளவாடியதாக திருமதி அக்கினேவின்அரசுதன்மீதுசுமத்தியுள்ளதவருனகுற்றச்சாட்டுக்களுக்கு 1500 கோடி டாலர் நஷ்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்யப்போவதாக முன்னுள் ஜனதிபதி திரு பேடினன் மார்க்கோஸ் தெரிவித்துள்ளார்.

அரசியல் தஞ்சம்கோரி திரு. மார்க்கோஸ் தற்போது ஹவாய் தீவில் தங்கியிக்கிறுர். டெலக்ஸ் செய்தி ஒன்றின்மூலமே மேற்படி தகவலை மணிலாவிற்கு அனுப்பியுள்ளார். (சி)

---

★ ஒலிம்பிக் பந்தய பார்வையாளர்களுக்கு

# 'எய்ட்ஸ்' நோய் தவிர்ப்பு சான்றிதழ் அவசியம்

## தென்கொரிய அரசு முடிவு

சியோல், ஜூலை-21

தென் கொரிய தலை நகர் சியோலில் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் பந்தயத்தில் பார்வையாளராகக் கலந்துகொள்வோர் 'எய்ட்ஸ்' நோயற்றவரென்று உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைச் சமர்ப்பித்தால் மாத்திரம் மைதானத்துள் அனுமதிக்கப்படுவரென அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாகத் தென் கொரிய சுகாதார அமைச்சர் திரு. றி ஹய் வொன் தகவல் தருகையில், இப்பந்தயத்தைப் பார்வையிட உலகின் பல பாகங்களிலுமிருந்து சுமார் 3 லட்சம் பேர் வரையில் வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது

இவ்வேளை 'எய்ட்ஸ்' நோயாளிகள் மைதானத்தில் எவ்விததிலும் நுழையும்பட்சத்தில் அங்கிருப்போருக்கும் இது பல வழிகளிலும் பரவக்கூடும். இதனைத் தவிர்க்கவே இந்நடவடிக்கை என்றுர்.

இதேவேளை தென்கொரிய அரசு 'எய்ட்ஸ்' நோயைப் பொது இடங்களில் பரப்பும் நோயாளி ஒருவர் கண்டுபிடிக்கப்படும் பட்சத்தில் அவருக்கு 7 வருட சிறைத்தண்டனை வழங்கவும் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது (சி)

---

வளைகுடாவில்

# யுத்த நிறுத்தம் மேற்கொள்ளுமாறு ஐ. நா. பாதுகாப்பு சபை நிர்ப்பந்தம்!

நியூயோர்க், ஜூலை 21

வளைகுடாவில் உடனடியாக ஈரானும் ஈராக்கும் யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்கு தமது துருப்புக்களைத் திருப்பியழைத்துக்கொள்ளவேண்டுமென ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ஏகமனதாக பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டது.

இதனையடுத்து பாதுகாப்புச் சபையின் கூட்டம் நேற்று ஒத்திவைக்கப்பட்டதும் செயலாளர் நாயகம் திரு. பெரஸ்டி கியூலர் ஈரான் ஈராக் நாட்டு பிரதிநிதிகளைத் தமது அலுவலகத்தில் தனித்தனியே சந்தித்து பல மணி நேரம் பேச்சுவார்த்தையிலீடுபட்டார்.

ஐ. நா. ஸ்தாபன விதிகளின்படி யுத்தநிறுத்த ஏற்பாட்டை அனுசரிப்பதை உறுதிப்படுத்துவதற்கு பாதுகாப்புச் சபை மேலும் உறுதியான சில நடவடிக்கைகளை எடுக்குமென்றும் இரு தரப்பினருக்கும் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

வளைகுடா யுத்தத்தில் 15 நாடுகளைக்கொண்ட பாதுகாப்புச்சபை முதற்தடவையாக அதன் அதிகாரத்தைப் பயன்படுத்த முன்வந்துள்ளது. பாதுகாப்புச் சபையில் கொண்டுவரப்படும் பிணக்குகளில் ஒரு சில தடவைகளிலேயே இந்த உரிமை பயன்படுத்தப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்குமிடையிலான சண்டையை நிறுத்தி துருப்புக்கள் வாபஸ் பெறுவதை ஊர்ஜிதப்படுத்துவதற்காக ஐ. நா. சபையின அவதானிகளை அங்கு அனுப்பிவைக்கவேண்டுமெனவும் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது.

இவ்வாறுன தீர்மானங்கள் ஐ நா. சபையில் நிறைவேற்றப்பட்டுள்ள இவ்வேளையில் இரு தரப்பிற்குமிடையே மீண்டும் கடும் யுத்தம் மூண்டுள்ளது. இதில் பல பேர் கொல்லப்பட்டுளளதாகவும் தெரிய வந்துள்ளது. (சி)

---

'அரசியலமைப்பு —

# ஒற்றையாட்சிக்கு உட்பட்ட தீர்வையே விரும்புகிறேன்!'

## —ஜப்பானில் பிரேமா

டோக்கியோ, ஜூலை 21

"இலங்கை இனப்பிரச்னைக்கான எந்தவொரு தீர்வும் இலங்கையின் அரசியல்அமைப்பிற்கும் ஒற்றையாட்சி முறைக்கும் உட்பட்டதாகவே அமைய வேண்டுமென நான் விரும்புகிறேன் இதனையே இப்பிரச்னைத் தீர்வுக்காகவும் வலியுறுத்திக் கூறுகிறேன்."

இவ்வாறு இலங்கைப் பிரதமர் திரு. பிரேமதாசா டோக்கியோவில் யப்பான் ஒளிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்களித்த பேட்டிஒன்றில் குறிப்பிட்டார்.

இலங்கை இனப்பிரச்னைத் தீர்வுக்கு புதிய யோசனையாக வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணசபை ஜனதிபதி ஜயவர்த்தனுவால் முன்வைக்கப்பட்டிருப்பது தொடர்பாக பேட்டியாளர் கேட்ட கேள்வியொன்றுக்கு திரு பிரேமதாசா பதிலளித்தார்.

ஜனதிபதி அவர்கள் இப்புதிய யோசனையைமுன்

(7ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சமூகசேவை பயனுடையதாக இருக்கவேண்டு மானுல் படாடோபமின்றிச் செய்யப்படவேண்டும். வலதுகை செய்வதை இடதுகை அறியாமலிருத்தலே தலைசிறந்த சேவையாகும். — மகாத்மாகாந்தி.

# நமதுநோக்கு

## தியாகமும் தன்னம்பிக்கையும் கொண்ட தலைவர்

வளரும் பத்திரிகைக்கு அதன் உரிமையாளர் உயிரற்றவராகவும், ஆசிரியர் உயிர்த்துடிப்புடையவராகவும் இருக்கவேண்டும். “a dead proprietor and a live editor’’ என்று ஆங்கிலத்தில் அழகாக அடிக்கடி நினைவூட்டிவந்தவர் இறைவனடி எய்திய எங்கள் அபிமானத்துக்குரிய பெருந்தலைவர் கே. சி. தங்கராசா.

உரிமையாளர் ஒருவர் ஆசிரியருக்கு இந்த மணிவாக்கை வற்புறுத்துவதானுல் அவருடைய தியாகமும் தன்னம்பிக்கையும் எத்தகையதென்பதுவெளிப்படை.

றபர் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் புகழ்பெற்ற தலைவர் பீ. சரவணமுத்து தம்முடைய நூற்றுக்கணக்கான கிளாக்மாரில் திரு. தங்கராசாவின் நேர்மையையும், திறமையையும் பாராட்டியபோது அவர் ஒரு கூட்டுத்தாபன தலைவராகவோ அல்லது ஒரு தேசிய தினசரிப்பத்திரிகையின் தலைவராகவோ வெற்றிகாண்பாரென்று நினைத்திருக்க மாட்டார். எனினும் அமரர் சரவணமுத்துவின் அன்றைய கணிப்பு மிகச் சரியானதென்பது இன்று நிரூபிக்கப்பட்டது.

“எப்பவோ முடிந்த காரியம்’’ என்ற அருள்மொழி பொழிந்த சிவயோகசுவாமிகளின் ஆசிபெற்ற அமரர் கே. சி. எங்கள் பத்திரிகையின் முதற்பிரதியை சுவாமிகளுக்கு சமர்ப்பித்தபோது “ஏசுவார்கள் எரிப்பார்கள்; ஆனுல் உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்’’ என்று வாழ்த்தினுர்.

சுமார் முப்பது வருடசேவையில் நிமிர்ந்திருக்கும் இப்பத்திரிகை எந்தநிலையிலும் நடுநிலைமை பேணும் பலமுடையதென்ருல் அதன் ஸ்தாபகர் பட்டினத்தடிகள் சொன்னது போல “செத்தாரைப் போல் திரியும்’’ பண்புடையவரென்பதே முக்கிய காரணம்.

தோற்றத்தில் இருபெரும் மேதைகள்போல இவர் காட்சியளிப்பதாகப் பலர் சொல்வதை நாம் கேட்டிருக்கின்ருேம் - ஆங்கில தத்துவ மேதை பேட்ரான்ட் ரஸ்ஸல், இந்திய தத்துவ மேதை சேர். எஸ். ராதாகிருஷ்ணன்.

மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்பது உண்மையானுலும் இவ்விரு ஞானிகளுக்கும் பொதுவான ‘உண்மையில் தாகம்’ அமரர் தங்கராசாவின் வியத்தகு வாழ்வில் ஒரு பிரபல அம்சமாகும்.

தோற்றத்தில்மட்டுமல்ல, பண்புடைய மனிதனுக்கு தத்துவமேதை ராதாகிருஷ்ணன் வழங்கிய வரைவிலக்கணத்துக்கும் உதாரணமானவர் மறைந்த தலைவர். இனிய சுபாவமும், சமத்துவ உணர்வுமே பண்புடைய மனிதனின் இரு கண்கள் என்பது அவர்கூற்று.

இந்நாட்டின் அரசகூட்டுத்தாபனங்கள் தோல்வி கண்டதற்கு அவை அரசியல்வாதிகளின் புகலிடங்கள் அல்லது அரசின் ஆதரவாளர்களின் உறைவிடங்களென்பதால் அவை நட்டத்தில் ஓடுவது வியப்பல்ல; இதற்குப் புறநடையான ஒரு சில ஸ்தாபனங்களில் அமரர் தங்கராசா அயராது உழைத்துவந்த கிழக்கிலங்கை கூட்டுத்தாபனம் ஒன்று என்பதை ஆட்சிக்கு வந்த எல்லா அரசுகளும் பாராட்டிவந்தன.

கல்வியென்ருல் கொழும்பு இந்துக் கல்லூரி, மொழி என்ருல் ஈழநாடு, சமயமென்ருல் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல கோவில்கள். இவற்றின் பரிபாலனத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தவர் கே.சி

இவ்வளைத்துக்கும்மேலாக மறைந்த மாமனிதன் வள்ளன்மை நாடளைத்திலும் செறிந்திருப்பது பலருக்கு தெரியாதிருக்கலாம்.

ஈகைக்குபேர்போன குடும்பத்தில் அவதரித்தது மட்டுமல்ல தனிமனிதனுக்கோ அல்லது நிறுவனத்துக்கோ, இனமதபேதமின்றி அள்ளி வழங்கும்பான்மை எங்கள் ஸ்தாபனத்தலைவரில் என்றும் மறக்கமுடியாத மாண்பு.

எண்பது வயதில் பூரண வாழ்வு வாழ்ந்த இப்பெரியார் மறைந்து போனுரென்று சொல்வதைவிட ரோமாபுரி மக்கள் சொல்வது போல், நிறைவாழ்வு வாழ்ந்தாரென்பதே பொருத்தமாகும்.

அமரர் கே. சி. தங்கராசா

# தமிழ்ப் பத்திரிகையுலகில் அவர் ஒரு விடிவெள்ளி

மனிதர்கள் காலமாவது ஒன்றும் வியப்பான செயலன்று. ஆனுல் உலகின் மேன்மைக்காக வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் மறையும்போது உலகம் ஏழையாகி விடுகின்றது. அவரை அறிந்தவர்கள் புரிந்து கொண்டவர்கள் துயரம் அடைகிருர்கள். அந்த இழப்பினை ஈடு செய்ய முடியாமல் தவிக்கிருர்கள்.

திரு. கே. சி. தங்கராசாவின் வாழ்வும் வாழ்க்கை தத்துவமும் எமக்கு இன்று இந் நினைவுகளை ஏற்படுத்துகின்றன.

சொந்த முயற்சியால் முன்னேறி கொழும்பு நகரில் பிரபல்யமாகவும், செல்வாக்கோடும் வாழ்வதற்கான வாய்ப்பினை பெற்றிருந்த அப்பெருமகன், தான் பிறந்த மண்ணையும், தனது மக்களையும் மறந்து விட்டாரில்லை.

வாழ்க்கையில் முன்னேறும் மனிதன் தனது நாட்டுக்கும் மக்களுக்கும் தனது நிலையில் இருந்தபடி வசதிக்கேற்ப பணி ஆற்றிட வேண்டும் என்பது அவரது கொள்கை. அந்த

பி. எஸ். பி.

வகையில் ஆரம்பமானதே ‘ஈழநாடு’ எனும் இப்பத்திரிகை.

‘ரைம்ஸ்’ நிறுவனத்தில் திரு. தங்கராசாவும் ஓர் இயக்குநராகவிருந்த காலத்தில் சிங்களத்தில் ‘லங்காதீப்ப’ என்ற பத்திரிகை ஆரம்பமாயிற்று. அந்தக் காலத்திலேயே தமிழ் மக்களுக்கென தமிழ் பிரதேசத்தில் ஒரு பத்திரிகை ஆரம்பிக்கப்படவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் கருவாயிற்று.

1958-ம் ஆண்டு கலவரத்தையடுத்து தமிழ் மக்கள் தமது எண்ணங்களையும் கருத்துக்களையும் வெளியிடுவதற்கு ஒரு களம் தேவை என்ற நிலை உருவானபோது ‘ஈழநாடு’ பத்திரிகை யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாயிற்று.


0 0 0

திரு. தங்கராசாவை நான் முதன்முதல் கொழும்பு புல்லர்ஸ் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தேன். மலையக காந்தி திரு ராஜலிங்கம், வெள்ளையன் திரு. கணபதிப்பிள்ளை, திரு. கே. பி. ஹரன் முதலியவர்களுடன் அமர்ந்துஅளவளாகிக் கொண்டிருந்தார். திரு. ராஜலிங்கம் என்னை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அச்சந்திப்புக்குப் பிறகு யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் ‘ஈழநாடு’ பத்திரிகையில் பணியாற்ற வரும்படி திரு கே. பி. ஹரன் கேட்டுக் கொண்டார்.

‘திரு. தங்கராசாவுக்கு எல்லாருமே தேவையானவர்கள் தான், பத்திரிகை ஆரம்பித்து தமிழ் மக்களுக்கு பணியாற்

(7-ம் பக்கம் பார்க்க)



# மாகாண தினசரிகளுக்கு வழிகாட்டியாகத் திகழ்ந்தார்

வழக்கம்போல் காலையில் வானெலிச்செய்தி கேட்டபோது அதிர்ந்துவிட்டேன். என்னுல் நம்பமுடியவில்லை. அதிபர் திரு. கே. சி. தங்கராசா அவர்களின் மரணச் செய்தி கேட்டதும், மனம் சஞ்சலப்பட்டது.

பெயருக்கு ஏற்றவாறு தங்கமான மனது; எவரையும் தாக்கத்தெரியாத சுபாவம். எவர் அவரிடம் உதவிக்குச் சென்ருலும் ‘இல்லை’ என்று சொல்லாத பண்பு. மெது

— யோகி —

வான பேச்சு; மென்மையான பார்வை; பழகியவர்கள் எவராலும் இவற்றை இலகுவில் மறந்துவிடமுடியாது.

‘மாகாண தினசரி’ ஒன்று ஆரம்பிக்கவேண்டும் என்ற எண்ணம்; தொல்லைகள் பல தோன்றினுலும் அதனைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என்ற துணிச்சல் அவருக்கே சொந்தமானதாகும்.

தமிழினத்தின் தொல்லைகள் துன்பங்கள், துயரங்களை வெளி உலகிற்கு வெட்ட வெளிச்சமாக எடுத்துக்காட்டுவதற்கும் புதுப்புதுத் தொழில்களை ஆரம்பித்து, அவர்கள் பொருளாதாரத்துறையில் மேம்படுவதற்கும்; உரிமைகளை நிலைநாட்டி, சுதந்திரமாக வாழ்வதற்கான வழிகாட்டவும், அக்கிரமங்கள், அநீதிகளை எதிர்த்துக் குரல் கொடுப்பதற்கும் ஒரு பத்திரிகை தேவை என்பதை உணர்ந்து கால் நூற்ருண்டு காலத்துக்குமுன்னரே தமிழினத்திற்கு ‘ஈழநாடு’

[7ம் பக்கம் பார்க்க]

## ஈழநாடு தந்த தலைவர்

இன்புற்றே ஈழத்து தமிழர்க்காக
“ஈழநாடு’’ தந்த எங்கள் தலைவா!
என்று மின் மொழிபேசி
எம்மைக் காக்க இயல்பான
நன்னெறிகள் கூறும் செல்வ!
நானிலத்தில் நாடாதே எதையும் விட்டு
முன்னவனின் பாதமதைச் சென்றிட்டீரோ!
தங்கமென யாம் போற்றும்
தங்கராசா ஐயா!

ஃ ஃ ஃ

கடதாசி ஆலைதனைக் கட்டிக்காத்தே
கருதரிய பெரும்புகழைப் பெற்றீர்
நடமாடும் சிந்தனையின் ஊற்ருய் நல்ல
இந்துமத தாபனங்கள் வளரச்செய்தீர்
கடவுளுக்கு ஏற்புடைய கருமம்செய்ய
சரசுவதி மண்டபத்தை வளரச்செய்தீர்!
தேடுதற்கு இயலாத குணத்தின் செல்வ
தேடிடுவேன் தேடரிய தங்கள் பண்பை!

ஃ ஃ ஃ

ஈழமிது இயல்புடனே சிறப்புற்ருேங்க
ஈழத்தில் தினசரியாய் ஈழநாட்டை
வீழாது வீருப்பாய் வளரச் செய்து
வெற்றிபல பெற்றிடவே வழிசமைத்தீர்!
ஆழமது காணுத அறிவுச்செல்வ!
அடங்கியதோ உங்களுடல்!
தாழாது அரற்றுகின்ருேம் தந்தை போல்வீர்!
தந்திடுவீர் சாந்திபெற! சாந்தி! சாந்தி!

மா. லீலாவிநோதன்.

## எல்லாம் நிறைந்த இனியதோர் காவியம்

தமிழ்மொழிப் பற்றும் தமிழ் இனப்பற்றும்
அமிழ்து நேர்குணங்களும் கொண்டநற் பண்ப!
நீ ஓர் பெருமகன்! நீ ஓர் காவியம்
நின்தன் பணிகள் வையகம் அறியும்!
ஈழநாடென்னும் இனியநல் ஏட்டைத்
தொடக்கித் தமிழ் மண்ணில் நாளேடொன்றே
இல்லாக்குறையை நீக்கினை நீயே!
தங்கம் அனைய நின்கரம் தொட்ட
எல்லாப்பணியும் சிறக்கும் என்பதை
ஈழநாடாம் இதழ் காட்டியதே!
எண்ணிய எண்ணியாங் கெய்தும் இயல்பினை
கண்ணியம் மிளிரும் புண்ணிய குலத்தினை!
சிறியரயாயினும் பெரியரே யாயினும்
யார்க்கும் அன்பு காட்டும் நினது
மனிதநேய நெஞ்சமோ ஆலயம்!
வேலைவேண்டி வருபவர் தமக்கும்
சிபார்சுகள் உதவிகள் வேண்டுவோர் தமக்கும்
ஒல்லும் வகையில் உதவினை ஐயா!
பொன்னிகர் மேனியும் நின்புன்னகையும்
மென்மைசேர் இயல்பும் இன்மொழி நாவும்
எம்நெஞ்சத்தை என்றுமே அகலா!

ம. பார்வதிநாதசிவம்

சந்தேகநபர்

# உள்காற்சட்டையுடன் நீதிமன்றம் கொண்டுவரப்பட்டார்

[கொழும்பு]

கொழும்பு மேலநீதிமன்றத்தில் விளக்கமறியல் கைதி ஒருவர் உள்காற்சட்டையுடன் சமுகமளித்த சம்பவமொன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்குச் சதிசெய்தார்களென்ற குற்றச்சாட்டில் 23 சந்தேகநபர்கள் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன் கொண்டுவரப்பட்ட போது 23-வதுஎதிரியான சித்திரசேனவே இந்த உடையில் சிறைக்காவலர்களால் கொண்டுவரப்பட்டார்.

சந்தேகநபர்கள் சார்பில் ஆஜரான சிரேஷ்ட சட்டத்தரணி திரு. குமார் பொன்னம்பலம் இச்சம்பவத்தை நீதிமன்றத்தின்கவனத்திற்கு கொண்டு வந்து குறிப்பிட்டதாவது:

23வது சந்தேகநபர் டபிள்யு. சித்திரசேன வைத்தியமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். தான் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும் என்றும் தனக்கு உடுப்புகள் தேவையெனவும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அவர் அறிவித்திருந்தார். எனினும் அவரது கோரிக்கை நிறைவேற்றப்படவில்லை. தான் உள்காற்சட்டையுடன் நீதிமன்றத்திற்கு சமுகமளித்தமைக்காக அவர் மன்றில் மன்னிப்புக் கோருகிறுர்.''

இச்சம்பவம் பற்றி சிறைச்சாலை உத்தியோகத்தரிடம் வினவிய நீதிபதி அடுத்தமுறை உடுப்புகளின்றி சந்தேகநபர் இருந்தால், அவரை அவ்வாறே நீதிமன்றத்திற்கு கொண்டுவருவீர்களாவெனக் கேட்டார்.

விசாரணை முடிவில் இவ்விவகாரம் தொடர்பாக நீதிமன்றத்தில் இம்மாதம் 24-ம் திகதி சிறைச்சாலை அத்தியட்சகரத்னயைக்காவையும், பிரதம ஜெயிலர் ரேகர் ஜயசேகரவையும் ஆஜராகுமாறு நீதிமன்றம் ஆணை பிறப்பித்துள்ளது

## ஆரோக்கியமான குழந்தைகளுக்கான போட்டி

யாழ்ப்பாணம், புதன்

யாழ். மாநகராட்சி மன்றப் பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கிடையில் ஆரோக்கியமான குழந்தைகளைத் தேர்ந்தெடுக்கும் போட்டி யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினரால் 'யுனிசெப்' திட்டத்திற்கமைய நடாத்தப்படவுள்ளது.

பொம்மைவெளி மகப்பேற்று நிலையத்தில் இம்மாதம் 23ம் திகதி காலையும், மடத்தடி மகப்பேற்று நிலையத்தில் 27ம் திகதி காலையும் மேற்படி போட்டிகள் நடைபெறவுள்ளன.

ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கிடையேயும் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கிடையேயும் நடைபெறவிருக்கும் இப்போட்டி சம்பந்தமான சகல விபரங்களையும் யாழ். மாநகர சுகாதாரப் பகுதியுடன் தொடர்பு கொண்டு அறியலாம்.

## கோட்டையிலிருந்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வீதியில் தமிழ் பெண்ணை விவாகம் செய்திருந்தார். சின்னக்கடைக்கு சென்ற போது படையினர் சுட்டு காயமடைந்தார். யாழ் டேவிட்வீதியை சேர்ந்த மாணவன் பரராசசிங்கம் நளின் அரிஸ்டெலா (வயது 17) இவர் சென்சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் கல்விபயில்பவர். மணியம் தோட்டத்தை சேர்ந்த மகாலிங்கம் (வயது 18) காயமடைந்தார். இவர் முல்லைத்தீவைச் சேர்ந்தவர் தொழில் செய்வதற்காக யாழ்ப்பாணம் வந்திருந்தார் இவர்கள் மூவருமே படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். [கு]

## இன்று சிரமதானம்

[மண்டைதீவு]

மண்டைதீவு மகாவித்தியாலய சுற்றுப்புறவேலிகளை சிரமதான மூலம் அடைப்பதற்கும் இவ்வித்தியாலய விளையாட்டு மைதானத்தை புனரமைப்பதற்குமான மாபெரும் சிரமதான வைபவம் இன்று 22-ம் திகதி நடைபெறவுள்ளது இவ்வித்தியாலய அபிவிருத்திச்சபை இச்சிரமதானத்திற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

வித்தியாலய அதிபர் திரு வே. நடேசபிள்ளை தலைமையில் நடைபெறும் இச்சிரமதான வைபவத்தில் இக்கிராமத்தில் உள்ள பல பொதுஸ்தாபனங்களின் தொண்டர் பிரிவுகளும் மாணவர்களும் கலந்துகொள்ளவுள்ளனர்.

## புனர்வாழ்வு அமைச்சின் நிவாரண உதவி

(மாவிட்டபுரம்)

கட்டுவன் பகுதியில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டு அகதிகளாகியுள்ள சுமார் 900 குடும்பங்களுக்கு புனர்வாழ்வு அமைச்சின் இருவார நிவாரண உதவி அடுத்த வாரத்தில் வழங்கப்படவுள்ளது.

ஏற்கனவே இக்குடும்பங்களுக்கு ஒருவாரத்திற்கு வழங்கப்பட்ட நிவாரண உதவியின் தொடராக இந்நிவாரணம் வழங்கப்படும்.

இதற்கான ஒழுங்குகளை வலிவடக்கு உதவி அரசாங்க அதிபர் செல்வி மைதிலி சோமசுந்தரமும். கட்டுவ பகுதி கிராமசேவை அலுவலர் திரு இ ராஜமோகனும் செய்துவருகின்றனர்.


## பணிவான வேண்டுகோள்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் மன்னுர், வவனியா சாலைகளின் இணைப்பதிகாரியாக தன்னலமற்ற சேவை புரிந்து, நல்லதோர் போக்குவரத்து சேவையை வழங்கிக்கொண்டிருக்கும்

**ஜனுப் M. A. கபூர்** அவர்களும், அவரது மகனும் 14-07-87 அன்று துரதிர்ஷ்டவசமாக இனந்தெரியாதவர்களால் கடத்திச்செல்லப்பட்டார்கள். அவருடைய தன்னலமற்ற சேவை தடைப்பட்டதினுல் பாதிக்கப்பட்டிருக்கும் போக்குவரத்துச் சேவையை சீர்செய்வதற்காகவும் மக்கள் மீண்டும் அவருடைய தரமிக்க சேவையை பெறவேண்டுமென்பதற்காகவும் இப்பிராந்திய போக்குவரத்துச் சபை ஊழியராகிய நாம் அவரை விடுவித்து உதவுமாறு பணிவன்புடன் இது சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கின்றேம். நன்றி

வ. பி. போ. ச.

மன்னுர் சாலை ஊழியர்கள்

[சி- 9968]


## ஈழநாடு ஸ்தாபகர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் பத்திரிகைத்துறையின் முன்னேடிகளில் ஒருவரான திரு. தங்கராஜா இலங்கையின்பழம்பெரும்பத்திரிகை நிறுவனமான 'டைம்ஸ்' நிறுவனத்தின் இயக்குநராகவும் பணியாற்றி சிங்கள, ஆங்கில பத்திரிகைகளின் வளர்ச்சிப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

திரு. தங்கராசா கொழும்பில் தமது உத்தியோகப்பணிகளுடன் தமிழ்ப்பணியும் சைவத்தொண்டும் ஆற்றிவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு. தங்கராஜாவின் மறைவுபற்றிய செய்திகேட்டவுடன் பம்பலப்பிட்டி புல்லர்ஸ் வீதியிலுள்ள அவரது இல்லத்துக்கு அரசியல், தொழில் துறை பிரமுகர்கள் திரளாக வருகைதந்து இறுதி அஞ்சலி செலுத்திச் சென்றுர்கள்.

## யாழ். ஆயர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி]

1959-ம் ஆண்டு ''ஈழநாடு'' பத்திரிகையை அவர் ஆரம்பித்தபோது அதன் வளர்ச்சியில் தருக்கிட்டஎத்தனையோஇடர்களையும் களைந்தெறிந்து சிறந்த நிர்வாகத்தின் துணை கொண்டு இன்றுவரை அதனை வழி நடாத்திச் சென்றுள்ளார்.

## யாழ். பல்கலைக்கழக

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

1959ம் ஆண்டு இவரால் ஆரம்பிக்கப்பட்ட 'ஈழநாடு' பத்திரிகை இன்று ஈழத்தில் தலைசிறந்த தமிழ் பத்திரிகையாக இன்றுவரை வெளிவந்து கொண்டிருக்கிறது

ஈழத் தமிழரின் குரலை வெளிப்படுத்தும் சாதனமாக வெளி வந்து கொண்டிருக்கும் 'ஈழநாட்டை' வளர்த்த பெருமை அவருக்கே உரியது.

அனைத்துலக தமிழாராய்ச்சி மன்றக்கிளை ஈழத்தில நிறுவப்பட்ட போது அதன் முக்கிய நிறுவனர்களில் ஒருவராக தொண்டாற்றி 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில்நடைபெற்ற நான்காவது அனைத்துலக தமிழ் ஆராய்ச்சி மகாநாடு சிறப்புற நடைபெற ஆசிகள் கூறி ஊக்கப்படுத்தியமை நினைவு கூறத்தக்க நிகழ்ச்சியாகும்.

காலத்துக்குக் காலம் மறைந்துவரும் தமிழ்த்தலைவர்களின் மறைவு வரிசையில் கே.ஸி தங்கராஜாவின் மறைவும் தமிழ் மக்களுக்கு ஈடுகொடுக்க முடியாத பேரிழப்பாகும்.

## யாழ். அரச அதிபர்

(1ம் பக்கத் தொடச்சி)

யாழ்ப்பாணத்தில் பிறந்து, கல்விகற்று கொழும்பில்நீண்ட காலம் உயர்பதவிகளை வகித்து வந்தபோதிலும் கே ஸி தங்கராஜா தமிழ் மக்களுக்கென யாழ்ப்பாணத்தில் ஒருபத்திரிகை அவசியமென உணர்ந்து கொண்டதின் பலனே இன்று ''ஈழநாடு'' பத்திரிகை எமது கைகளில் தவழ்கிறது

## ஆணையாளர்

1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ்ப்பாணத்தில் தமிழ்மக்களுக்கென ஒரு தமிழ்ப்பத்திரிகையை ஆரம்பித்து அதற்கு ''ஈழநாடு'' என்று பெயர் சூட்டி 29 ஆண்டுகள் வரை வளர்த்த பெருமை அமரர் தங்கராஜாவுக்கே உரியது.

## வண்ணை செந்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இவர் காலத்தில் ஆலயத் திருப்பணி வேலைகள் நடைபெற்றதும் அப்பொழுது இந்திய மாமல்லபுரத்தில் செதுக்கப்பட்ட வள்ளி தெய்வயானை சமேத திருச்செந்தூர் முருகப்பெருமானைப் போன்ற விக்கிரகம் இவ்வாலயத்துக்குத் தருவிக்கப்பட்டு குடமுழுக்கு செய்வித்ததுமான பெருமைக்கு சிகரமாக இருந்ததர் பெரியார் தங்கராஜா அவர்கள்.

'இப்பெரியாரின் இழப்புச் சைவ மக்களுக்கும் குறிப்பாக யாழ் நகர மக்களுக்கும் பேரிழப்பாகும்.

## ரேட்டறி உறுப்பினர்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். ரேட்டறிக் கழகத்தினரின் ஆண்டுப் பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது 87ம், 88ம் ஆண்டிற்குரிய புதிய நிர்வாகசபை தெரிவுசெய்யப்பட்டது. பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டவர்களாவர்.

தலைவர்: கலாநிதி ரி. விநாயகமூர்த்தி, உபதலைவர்: கலாநிதி ஆர். சுந்தரலிங்கம், செயலாளர்: என். கருணைஆனந்தன், பொருளாளர்: கே. சிவராஜ்.

அத்தியட்சகர்கள்: சமூக சேவை: எஸ். உருத்திரலிங்கம், கழக சேவை: சி. சிறீஸ்கந்தகுமார், சர்வதேச சேவை: ஆர். பாலசுப்பிரமணியம். தொழிற்பயிற்சி சேவை: கலாநிதி சி. யோகேந்திரராஜா. இதழ் ஆசிரியர்: ஆர். பி மயில்வாகனம், உபசரணை: கே. சிவகாந்தன்.

## தமிழ்குழுக்களுடன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் பிரதிநிதி டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் தத்தம்இயக்கங்களின் சார்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பையடுத்து இந்திய ராஜதந்திர வட்டாரத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் கருத்து வெளியிடுகையில் இனப்பிரச்னைத் தீர்வுக்கான சூழ்நிலைகள் பல்வேறு வகைகளிலும் உருவாகிவருகிறது என்றும், இவைதீர்விற்கு நல்ல அறிகுறியாக உள்ளதென்றும் தெரிவித்தார்.

## நல்ல முடிவுகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

''இலங்கை ஜனுதிபதியுடனும் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் இலங்கையில் உள்ள இந்திய ஸ்தானிகர் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் அடிப்படையிலேயே இலங்கை இனப்பிரச்னைக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

டிசம்பர் 19 யோசனைகளை விட இலங்கையின் வடக்கையும், கிழக்கையும் இணைத்து தனிமாநிலமாக்கும் இலங்கையின் புதிய யோசனைகள் நல்லதாக உள்ளதா என்ற கேள்விக்குப் பதிலளித்த திரு மேனன், ''இலங்கை இனப்பிரச்னை முழுவதையும் நாம் இபபோது விரிவாகஆராய்ந்து வருகிறேம். நல்ல முடிவுகளை எதிர்பார்ககிறேம் என்று கூறினுர்.''

## பயிற்சி வகுப்புகள்

[சுண்டுக்குளி]

யாழ். மாவட்டத்திலுள்ள விசேட சேவை உத்தியோகத்தர்களுக்கு கிராம சேவை அலுவலர்களுக்கான பயிற்சிவகுப்புகள் தற்பொழுது நடைபெறுகின்றன.

யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் தொடங்கிய 3நாள் பயிற்சி வகுப்பு இன்றுடன் முடிவடையும்.

இப்பயிற்சி வகுப்பில் யாழ் மாவட்டத்திலுள்ள 78 விசேட சேவை உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர். பயிற்சி வகுப்புகள் முடிவடைந்ததும் கிராமசேவை அலுவலர்களுக்கான நியமனப் பத்திரங்கள் அரசாங்க அதிபரினுல் இவர்களுக்கு வழங்கப்படும்.

இம்மாவட்டத்தில் தற்பொழுது 149 கிராம சேவை அலுவலர் பிரிவுகள் உண்டென்றும் தற்பொழுது நியமனம் பெறுபவர்களுடன் இவை 227 ஆக அதிகரிக்கப்படும் என்றும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

## வல்லைப் பாலம் தகர்ப்பு

யாழ்ப்பணம், புதன்

வடமராட்சிப்பிரதேசத்தை ஏனைய பகுதிகளுடன் இணைக்கும் பிரதான பாலமான வல்லைப்பாலம் நேற்று அதிகாலை தகர்க்கப்பட்டது

இப்பாலம் உடைக்கப்பட்டதையடுத்து இதன் ஊடாக இடம்பெற்ற போக்குவரத்துகள் யாவும் மீண்டும் கொடிகாமம் வீதிவழியாகவே மேற்கொள்ளப்படவேண்டியுள்ளது

கடந்த மாதம் வடமராட்சி இராணுவ நடவடிக்கையின் போது இப்பாலம் உடைக்கப்பட்டது இப்பாலம் இதுவரை நான்கு தடவைகள் உடைக்கப்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது. (கு)

## வீடமைக்கும் போட்டியில் வெற்றி பெற்றேர்

(கிளிநொச்சி)

குறைந்த செலவில் வீடமைக்கும் போட்டியில் கிளிநொச்சி மாவட்டத்தில் பின்வருவோர் வெற்றியீட்டியுள்ளனர்.

1வது இடம்: திரு த. சிவகுரு, நெற்புலவு, பூநகரி; 2வது இடம்: திரு கு, தனபாலசிங்கம், முகாவில், இயக்கச்சி; 3வது இடம்: திரு. செ. அன்ரனிதாஸ், விவேகானந்தநகர், கிளிநொச்சி.

இவர்களுக்குரிய பரிசும், சான்றிதழ்களும், காலக்கிரமத்தில் வழங்கப்படுமென கிளிநொச்சி மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை பதில் முகாமையாளர் தெரிவித்துள்ளார். (மா)

## சர்வோதயம் உதவி

யாழ்ப்பாணம் புதன்

வடமராட்சியில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்து நாகர்கோவில் அ. மி. த பாடசாலை, நாகதம்பிரான் கோவில் மடம் ஆகியவற்றில் தஞ்சமடைந்திருந்த சுமார் 700 குடும்பங்களுக்கு சர்வோதயத்தினுல் அரிசி சீனி, பால்மா தேங்காய் உட்பட பல அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டன. (ஓ)

## சங்கிலி அபகரிப்பு

வவனியா, செவ்

கூட்டுறவுப் பெண் பரிசோதகர் ஒருவரின் தங்கச் சங்கிலி ரயிலில் வைத்து அபகரிக்கப்பட்டது, திருடனை மடக்கிப் பிடிக்க முயன்ற அவரது கணவர் கத்திக் குத்துக்கு இலக்கானுர்.

மருதானையிலிருந்து வவனியா ரயிலில் வரும்போது வனவாசல என்ற இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றது.

## புங்குடுதீவில் வடமராட்சி அகதிகள்

(புங்குடுதீவு நிருபர்)

வடமராட்சிப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து அகதிகளாக புங்குடுதீவு பகுதியில் பலர் தஞ்சமடைந்துள்ளனர்.

புங்குடுதீவு மத்திகிராமசேவகர் பிரிவில்தஞ்சமடைந்துள்ள சுமார் முப்பதுக்குமதிகமான குடும்பங்கள் பெரும்கஷ்டத்தின் மத்தியில் வாழுகின்றன.

இக்குடும்பங்களின் நிலைமை பற்றிய விபரங்களை சேகரித்து புங்குடுதீவு மத்தி கிராமசேவகர் திரு. இ. வைத்திலிங்கம் வேலணை உதவிஅரசாங்க அதிபர் திரு. எல். சடாட்சரசன் முகதாசுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

### ஆஸி. போலி விஸா—

# 43 பேருக்கும் தலா ரூ. 2500 அபராதம்

(நீர்கொழும்பு)
போலி விஸாவுடன் ஆஸ்திரேலியா சென்ற 43 தமிழர்களுக்கும் நீர்கொழும்புமாஜிஸ்ரேட் தலா 2500 ரூபா அபராதம் விதித்தார்.

இம்மாதம் 2ம் திகதி கட்டுநாயக்கா, திருவனந்தபுரம், பம்பாய் ஊடாக ஆஸ்திரேலியா செல்வதற்காக கட்டுநாயக்க சென்ற 43 தமிழர்கள் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் கைதுசெய்யப்பட்டனர்.

இவர்கள்மீது போலி ஆஸ்திரேலியா விஸா வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு நீர்கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு கடந்த 17ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

மீண்டும் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது நீர்கொழும்பு மாஜிஸ்ரேட் இவர்களுக்கு தலா 2,500 ரூபா அபராதம்விதித்து தீர்ப்பு வழங்கினர்.

### யாழ். குடாவின்

# 35 வீத பிரதேசம்

## அரசின் கட்டுப்பாட்டில்

### லலித் கூறுகிறர்

(கொழும்பு)
கிழக்குமாகாணம் வன்னிப் பிரதேசத்துடன் யாழ் குடாநாட்டின் 35 வீதமான பிரதேசமும் அரசின்கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளது என தேசியபந்தோபஸ்துஅமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி ஊவாமாகாணத்தில் இடம் பெற்ற கூட்டம்ஒன்றில் பேசுகையில் கூறினர்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது:

கடந்த 4 ஆண்டுகளாக அரசு பாதுகாப்பைப் பலப்படுத்தாவிடின் இன்று பேச்சுவார்த்தைபற்றியோ நாட்டின் பாதுகாப்புப் பற்றியோ சிந்தித்துக்கூட இருக்கமுடியாது.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கு படிப்படியான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது.

### யாழ். மருத்துவ சங்க வருடாந்த கூட்டம்

யாழ்ப்பாணம், செவ்
யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் இம்மாதம் 24ம் திகதி தொடக்கம் 26ம் திகதிவரை யாழ். வைத்தியசாலையில் அமைந்திருக்கும் தாதிகள் பயிற்சிப் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் பேராசிரியர் ப. சந்திரசேகரம் இக்கூட்டத் தொடரை 24ம் திகதி மாலை 2 பணிக்கு வைபவரீதியாக ஆரம்பித்துவைப்பார்.

இக் கூட்டத்தொடரில் 20 ஆய்வுக்கட்டுரைகள் சமர்பிக்கப்படவிருக்கின்றன.

26ம் திகதி காலை 10 மணிக்கு யாழ். மருத்துவபீட பீடாதிபதி பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் [நந்தி] டாக்டர் வி. ரி. பசுபதி ஞாபகார்த்த உரை நிகழ்த்துவார். (மா)

### மாவை கந்தன் விசேஷ அபிஷேக ஆராதனை

(மாவிட்டபுரம் நிருபர்)
மாவைக்கந்தன் வருடாந்த உற்சவம் இம்முறை நிறுத்தப்பட்டதால் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமானுக்கு மாவை முருகன் உற்சவத்தில் 25 தினங்கள் விஷேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்றுவருகின்றன

இம்மாதம் 1ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருந்த மாவைக்கந்தன் ஆலய உற்சவம் அங்கு இராணுவம் நிலை கொண்டுள்ளதால் இம்முறை நிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.

வருடாவருடம் விரதம் அநுஷ்டிக்கும் மாவை அடியார்களின் நலனை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தில் முருகப் பெருமானுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன.

### பண்டத்தரிப்பில் வை.எம்.சி.ஏ. மாடிக்கட்டிடம்

(பண்டத்தரிப்பு)
பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. இயக்கத்திற்குச் சகல வசதிகளும் அடங்கிய மாடி கட்டிடமொன்று சுமார்மூன்று லட்ச ரூபா செலவில் அமைக்கப்பட்டுவருகின்றது.

பண்டத்தரிப்பு திருச் சபைத் தேவாலயத்திற்கு அண்மையிலுள்ள காணியில் நிறுவப்பட்டுவரும் இந்த மாடிக் கட்டிடத்தில் பொது நிகழ்ச்சிகள் நடத்தக் கூடிய வசதிமிக்க மண்டபமும் மற்றும் நிர்வாக அலுவலகமும் இடம்பெறுமென்றும், எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இக்கட்டிடம் திறந்துவைக்கப்படவுள்ளதாகவும் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. தலைவர் ஆசிரியர் திரு. சு இரத்தினவேல் தெரிவித்தார்.

### திருடர் கைவரிசை

மாவிட்டடரம், செவ்
ஊறணி கிராமத்தில் மக்கள் இடம் பெயர்ந்த காலியான வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டி வருகின்றனர்.

இராணுவத்தினருக்கு டிமிக்கி கொடுத்துவிட்டு குறுக்குப் பாதைகளால் செல்லும் திருட்டுப் பேர்வழிகள் ஊறணி பகுதியிலுள்ள வீடுகளில் பொருட்களை களவாடுவதில் ஈடுபடுவதாகவும் முருங்கைக் காய்களை கூட அவர்கள் விட்டு வைக்கவில்லையென்றும் கூறப்படுகின்றது.

### 19 கிராமோதய சபைத் தலைவர்கள்


[வவனியா நிருபர்]
வவனியா தெற்கு தமிழ்ப் பிரிவில் இம்முறை 19 கிராமோதய சபைத் தலைவர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

புதிய கிராமோதய சபைகளின் தெரிவு இம்மாதம் இறுதியில் வவனியா மாவட்டத்தில் நடைபெறும்.

# தென்மராட்சியில் கடும்வரட்சி; நீரின்றி அகதிகள் தவிப்பு!

## கிணறு, குளங்கள் வற்றிவிட்டன

கச்சாய் மகாவித்தியாலய அகதிகள் முகாம் கடற்கரைக்கு சமீபத்தில் அமைந்திருந்தது. நெல்லியடிசம்பவத்தின் பின் இங்கு அகதிகள் வந்திருந்தனர். எல்லாமாக 25 குடும்பங்கள் 136 அகதிகள் பழைய



பசியால் தவிக்கும் சிறுவர்கள்

பாடசாலையில் இவர்கள் தங்கியிருந்தனர். புதிய வித்தியாலய கட்டடத்தில் 200 பேர் வரை தங்கியிருந்தனர். இவர்களில் 50 பேர் வரை வேறு இடத்திற்கு சென்றுவிட்டனர். தனியார் வீடுகளில் தங்கியிருந்த 50 பேர் புதிதாகஅன்று வந்திருந்தனர்.

அதிபர் பண்டிதர் எஸ். கே. சீவரத்தினம் மற்றும் ஆசிரியர்களும் அங்கிருந்தனர். மாணவர்கள் எவரும் இல்லை அகதிகள் வந்திருந்ததால் வகுப்புக்கள் இல்லை என்றார் அதிபர். பாடசாலை ஒழுங்காக நடந்து வந்ததாகவும், நெல்லியடி சம்பவத்தின் பின்னர் அகதிகள் வந்துகுவிந்ததால்வகுப்புக்களை நடத்தமுடியவில்லை என்றும் அவர் தெரிவித்தார். பரீட்சைக்கான ஏற்பாடுகள் நடைபெற்றன. பின்னர் பரீட்சை பின் போடப்பட்டுவிட்டது.

### ஒன்றுகச் சமையல்

மூன்று கட்டடங்கள். இரண்டு கட்டடங்களில் அகதிகள். ஒன்றில் சுகவீனமுற்றிருந்த சில அகதிகள் தங்கியிருந்தனர். பின்பகுதியில் ஒரு கொட்டகை. அங்கு பெண்கள் உணவுதயாரித்துக்கொண்டிருந்தனர். வரிசையாக பானைகளில் சோறு அவிந்து கொண்டு இருந்தது. மூன்று நான்கு குடும்பங்கள் ஒன்றுக சமையல்.

இவர்களுக்கு இன்னும் இந்திய நிவாரணம் கிடைக்கவில்லை. இளைஞர்கள் தான் தினமும் உணவுபொருள்களை வழங்கிவருகின்றனர். மரக்கறி தேங்காய்களை அப்பகுதி மக்கள் வழங்கிவருகின்றனர்.

இந்தமுகாமில் மாணவர்கள் சிலரும்இருந்தனர். மகேந்திரன், மனோகரன் என்று இரு மாணவர். இவர்கள் இரட்டையர்கள். கரவெட்டிவித்தியாலயத்தில் 6ம் வகுப்பில் படித்தவர்கள். அகதிகளாக வெளியேறியபின் கற்க முடியவில்லை. வீட்டிலிருந்து வெளியேறி கோவிலில் தஞ்சமடைந்தனர். அதன்பின் இங்குவந்து சேர்ந்தனர். இவர்கள் குடும்பத்தில் எட்டுப்பேர். இன்னும் நிவாரணம் கிடைக்கவில்லை.

### நிவாரணம் கிடைக்கவில்லை

இந்திய உணவுக்கப்பல்வந்து ஒருமாதமாகிறது. இன்னும் பாதிக்கப்பட்ட பல குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை. அரசநிவாரணம் கூட அதிகமானோருக்கு கிட்டவில்லை.

### சுட்டிபுரம் சம்பவம்

சுட்டிபுரம் அம்பாள்ஆலயத்தில் தங்கியிருந்த சிலகுடும்பங்களை இங்குசந்தித்தேன். சுட்டிபுரத்தில் ஹெலிதாக்குதலை

**வடமராட்சி அகதிகள் – 8**

தொடர்ந்து அங்கிருந்து இவர்கள் வெளியேறினர்கள்.

'சுட்டிபுரத்தில் என்ன நடந்தது?' என்றுகேட்டேன்.

சம்பவதினம் மாலை 5 மணிக்கு 2 ஹெலி கொப்டர்கள் சுற்றிவட்டமிட்டன. அச்சமடைந்த அகதிகள், பாதுகாப்பான இடம் தேடி ஓடினர்கள். ஆலயப்பகுதியில் சுட்டார்கள் முன்பகுதி தீப்பற்றி எரிந்தது என்றர்கள்.

### எவருக்கும் காயமில்லை

'எவரும் பலியானர்களா'? என்று கேட்டேன்.

''இல்லை, எவருக்கும் காயமும் ஏற்படவில்லை' என்றனர்.

'ஹெலி அங்கிருந்து செல்லுகையில் வழி, தெருக்களெல்லாம் சுட்டுச்சென்ற சத்தம் கேட்டது. அப்போது சிலர் காயமடைந்தனர்' என்றனர்.

'எவ்விடத்தில்' என்றுகேட்டேன்.

முத்தட்டுப்பகுதியில் சிலர் காயமடைந்தாகக் கூறினர்கள்.

அச்சமடைந்த அத்தனை பேரும், சுட்டிபுரத்திலிருந்து இரவிரவாகப் புறப்பட்டு கொடிகாமம், கச்சாய். மீசாலை பகுதிகளுக்கு வந்துவிட்டனர். வரணி மகாவித்தியாலயத்திலிருந்து பல குடும்பங்களும் அச்சத்தினல் வெளியேறிவிட்டன. சில குடும்பங்கள் மறுநாள் திரும்பிசென்றன.

சுட்டிபுரத்தில் அச்சத்திலை வெளியேறியபோது சில குடும்பங்கள் தங்கள் பொருள்களை எடுத்துச்செல்லவில்லைமறுநாள் வநது பாரத்தபோது, அப் பொருள்கள் இருக்கவில்லை.

**கா. யோகநாதன்**

உணவுப்பொருள்கள் கூடக் காணமல்போய்விட்டன. நிவாரணப் பொருள்கள் கூட இருக்கவில்லை இக்குடும்பங்கள் தற்போது வரணி மகா வித்தியாலயத்தில் தஞ்சமடைந்துள்ளன. உணவுப் பொருள்கள் எதுவுமின்றி கஷ்டப்படுகிறர்கள்.

### நிலைமை சீரானபின்

வல்வெட்டித்துறையைச் சேர்ந்தவர் வ. கனகலிங்கம், இவருடன் 12 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேர் நடந்துவந்துள்ளார்கள். நிலைமை சீரானபின் திரும்பிச்செல்லலாம் என்று தெரிவித்தார்.

தென்மராட்சியில் கடும் வரட்சி. கிணறு, குளங்களில் நீர் வற்றிவிட்டது. தண்ணீருக்காக அகதிகள் தவிக்கின்றனர் முகாமிலுள்ள இரு கிணறுகளிலும் நீர் வெகுவாகக்குறைந்துவிட்டது அகதிகள் நீர்பெறுவதற்கு 1மைலுக்குஅப்பால் செல்கிறர்கள். அகதிகளே அக்கிணறுகளை இருதடவைகள் கலக்கி இறைத்தும் தண்ணீர் கிடைக்கவில்லை. அக்கம்பக்கத்திலுள்ள வீடுகளிலும் இந்த நிலைதான்.

முகாம் பொறுப்பாளர் திரு. எஸ் எஸ் நாதன் அப்போது வந்துசேர்ந்தார்.

இளைஞர்கள் செய்யும் உதவியைத்தவிர இதுவரை வேறு எந்த நிவாரணமும் இந்த அகதிகளுக்குக் கிடைக்கவில்லை என்றர்.

அவருடன் பழைய பாடசாலை முகாமிற்குச் சென்றேன். அங்கு பல குடும்பங்கள் தங்கியிருந்தன.

கைதாகி காலிமுகாமிற்குச் சென்று வந்த இளைஞர் ஒருவரையும் அங்கு சந்தித்தேன். (தொடரும்)

### விசர்நாய்க்கடி அதிகரிப்பு

(பலாலி நிருபர்)
விசர்நாய்க்கடிக்கு இலக்காவோர் தொகை வலி வடக்கு பகுதியில் மீண்டும் அதிகரித்துள்ளது


இப்பகுதியில் ஒருநாளைக்கு ஒருவராவதுவிசர்நாய்க்கடிக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவது வழக்கமாகிவிட்டது

ஆனல் இந்த நோயாளிக்கு ஏற்றமுறையில் சிகிச்சை அளிப்பதற்கு வைத்தியசாலைகளில் தடுப்பூசிகள் இல்லை இதனல் விசர்நாய்கடிக்கும் இலக்காவோர் பாதிப்படையும் நிலை ஏற்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கருத்தரங்கு

பலாலி, செவ்.
காங்கேசன்துறை மானிப்பாய், கல்விவட்டாரத்தை சேர்ந்த 70க்கு மேற்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான முகாமைத்துவ கருத்தரங்கொன்று இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட பிரதம கல்வி அதிகாரி எம். எம். மன்சூர்கலந்து கொண்டார்.



விடுதலைப்புலிகள் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் இந்திய தூதரகச் செயலர் திரு. பூரி உரையாடிக் கொண்டிருக்கிறார்.

## கட்டுவனில் பாதிக்கப்பட்ட 900 குடும்பங்களுக்கு நாளை இந்திய நிவாரணம்

[மாவிட்டபுரம் நிருபர்]

இராணுவ நடவடிக்கைகளினால் கட்டுவன்பகுதியில்பாதிக்கப்பட்டு அகதிகளாக உள்ள குடும்பங்களுக்கு இந்திய நிவாரண உதவிப் பொருள்கள் நாளை வியாழக்கிழமை வழங்கப்படவுள்ளன.

இதற்கான உத்தரவுப்பத்திரங்கள் நேற்று மல்லாகத்தில் உள்ள வலி-வடக்கு உதவி அரசஅதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டன.

நாளைதெல்லிப்பழைதுர்க்காதேவி ஆலயத்திற்கு அருகாமையில் உள்ள ப. நோ. கூ. சங்கக்கிளையில் வைத்து செஞ்சிலுவைச் சங்கத்தினர்இந்திய நிவாரணப் பொருள்களைவழங்குவர்.

கட்டுவன் கிராமசேவையாளர் திரு. இ. இராஜயோகன் இதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளார்.

கட்டுவன் பகுதியில் பாதிக்கப்பட்டுள்ள சுமார் 900 குடும்பங்கள் இந்திய நிவாரண உதவிப்பொருள்களை பெறுவதற்கு தகுதியுடையவர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்டுவன் பகுதியிலிருந்து அகதிகளாக வெளியேறி வேறிடங்களில் தங்கியிருப்பவர்கள் அங்குஇந்திய நிவாரணஉதவிப் பொருள்களை பெற்றிருந்தால் அவர்களுக்கு இங்குநிவாரணப் பொருள்கள் வழங்கப்படமாட்டாதென உத்தியோகத்தர் ஒருவர்தெரிவித்தார்.

## வவனியாவிலிருந்து— 500தொன் அரிசியும் மாவும் கொண்டுவர ஏற்பாடு

(அலுவலக நிருபர்)

யாழ். குடாநாட்டிலுள்ள ப. நோ. கூ. சங்கங்களுக்கு விநியோகம் செய்வதற்கென வாரந்தோறும் 500 தொன் அரிசியும், கோதுமை மாவும் வவனியாலிருந்து கொண்டு வருவதற்கான ஏற்பாடுகளை யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் செய்துள்ளார்.

இது சம்பந்தமான கூட்டமொன்று யாழ். செயலகத்தில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வவனியா அரசாங்க அதிபர் திரு. செந்தில் வடிவேல், யாழ். உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் வவனியா உணவுக் கட்டுப்பாட்டதிகாரிஆகியோர் கலந்துகொண்டார்கள்.

வவனியாவில்இருந்துவாராந்தம் கொண்டுவரப்படவிருக்கும் அரிசியும், கோதுமைமாவும் கோப்பாயில் நீர்வேலி ப. நோ. கூ. சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்திலும் உடுவில் சுன்னுகம் ப.நோ. கூ சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடமொன்றிலும் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகிக்கப்படவுள்ளதெனயாழ். உணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம் தெரிவித்தார். [வா]

## பஸ்மீது கல்வீச்சு

யாழ்ப்பாணம், புதன்

கொழும்பிலிருந்து யாழ் நகர் நோக்கி நேற்றுமுன்தினமிரவு வந்த தனியார் பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டதால் பல பிரயாணிகள் சிறுகாயங்களுக்குள்ளானுர்கள்.

தனியார் பஸ்வண்டிகள்மீது கல்வீசும் சம்பவம் அடிக்கடி நடைபெற்று வருவதுடன் இக் கல்வீச்சு சம்பவம் வென்னப்புவவுக்கும் - உடப்புவவுக்குமிடையில் மட்டுமே நடைபெற்று வருகின்றது.

நேற்றுமுன்தினம் யாழ் நகர் வந்த தனியார் பஸ்கள் சிலவற்றின்மீது மேற்படி இடங்களில் வைத்து கற்கள் வீசப்பட்டதுடன் சில பஸ்கள்மீது துர்நாற்றம்வீசும் அழுக்கு நீரும் ஊற்றப்பட்டது. [வி

## துரிதகதியில் விநியோகம்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வறுமை நிவாரணந்திட்டத்தின் கீழ் சமூகசேவை திணைக்களத்தினுல் வழங்கப்படும் உணவு முத்திரை விநியோகம் வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தற்போது துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

இப்பிரிவிலுள்ள பத்துகிராமசேவை அலுவலர்கள் மூலம் இந்த உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்கான ஒழுங்குகளை உதவி அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் செய்துள்ளார்.

## விஷேட பூசை

யாழ்ப்பாணம், புதன்

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரநாதர் பாலாம்பிகை அம்மன் மகோர்சவத்தை முன்னிட்டு கடந்த 20ம் திகதி தொடக்கம் 10 நாட்கள் காலை 10-00 மணிக்கு விசேடஅபிசேகமும் அலங்கார பூஜையும் நடைபெறுகின்றது.

## நிவாரணப் பொருள் விநியோகம்

[பண்டத்தரிப்பு நிருபர்]

வடமராட்சிப்பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வந்து தஞ்சமடைந்திருக்கும் அகதிகளுக்கு நிவாரணப்பொருள்கள் விநியோகம் நாளைமறுதினம் 23ம் திகதி செய்யப்படவுள்ளது

இந்த நிவாரணப் பொருள்கள் அன்றையதினம் சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி வட்டுக்கோட்டை திருஞானசம்பந்தர் வித்தியாலயம், சங்கானை நிகரை வைரவர் ஆலயத்திற்கு பக்கத்திலுள்ள நெசவுசாலைக் கட்டிடம் ஆகிய இடங்களில் வைத்து சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினுல் வடமராட்சிபகுதியை சேர்ந்த அகதிகளுக்கு விநியோகம் செய்யப்படும்

இந்திய செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் ஆகியோரும் இதில் கலந்துகொள்வார்கள் இதற்கான ஒழுங்குகளை வலி மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு து வைத்திலிங்கம் செய்துள்ளார்

## ஒற்றையாட்சிக்கு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தபோதுதான் இலங்கையில் இருக்கவில்லை. எனினும் இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பிற்கு உட்பட்டதானதீர்வே மேற்கொள்ளப்படவேண்டுமென்றும் கூறினுர். (சி)

## தகவல் தாருங்கள்

வதிரியில் இருக்கும் திருமதி எஸ். ஆர்.புலேந்திரன் பற்றிய தகவல்களை அறிய அவரது தாயார் திருமதி ஆர். எஸ். என். தம்பித்துரை விரும்புகிருர்.

— திருமதி ஆர். என். தம்பித்துரை
மணியகாரன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு.

★

அல்வாய் மேற்கைச் [அட்டறந்தை] சேர்ந்த மகாலிங்கம் சத்தியலிங்கம் என்பவர் தமது வீட்டிலுள்ள பொருள்களை எடுப்பதற்காக புத்தூரிலிருந்து புறப்பட்டு அல்வாய் பகுதிக்கு கடந்த 12-ம் திகதி சென்று மீண்டும் திரும்பி வரவில்லை. இவர்குறித்த தகவல் அறிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்புகொள்ளவும்

— கிருஷ்ணு
இலங்கை வங்கி,
சாவகச்சேரி.

★

நெல்லியடியில் ஈ. என். எஸ். அன் சன்ஸ் சைக்கிள் கடையின் உரிமையாளர் ஈ. என். எஸ். செல்லத்துரை என்பவரையும், நல்லதம்பி என்பவரையும் கடந்த 12 நாட்களாக காணவில்லை. அவர்குறித்து தகவலறிந்தவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.

ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்,
கொடிகாமம்

## மாகாண தினசரிக்கு

(4ம் பக்கத் தொடர்ச்சி)

இதழ் ஒன்றை ஆரம்பித்து அதன் அத்திபாரமாக அமைந்தவர் இந்தப்பெரியார்.

உறுதியான அத்திபாரமாக அவர் அமைத்ததால் ஈழநாடு இன்று அடர்ந்து, படர்ந்து பெரும் விருட்சமாகிவிட்டது. இது தமிழினத்திற்கு அவர் செய்த மிகப்பெரிய சேவை என்றே கூறலாம்.

அவரை நான் நேரில் சந்தித்தது ஒரு சில நாட்கள். உரையாடியது சில நிமிட நேரங்கள். ஆனுல் அவை இன்றும் பசுமைபோல் என் நெஞ்சத்தை விட்டகலவில்லை. முதல் சந்திப்பு கொழும்பில். 1963 ஜனவரி மாதம் ஒரு தினம். நண்பர் ஒருவருடன சென்றிருந்தேன்.

என்னைப் பார்த்தார். நண்பரிடம் கேட்டார், 'வீரகேசரியில்' பணியாற்றியபின் விமோசனம் வார இதழை கொழும்பில் நடத்திவிட்டு வேலையின்றி வீட்டிலிருப்பதாகக் கூறினேன். அவர் வேறு எதுவும் கூறவே இல்லை. வேறு விடயங்களை நண்பரும் அவரும் பேசினுர்கள்.

இரு மாதம் கழிந்தபின் வந்தது ஒரு தந்தி. 'உடன் ஈழநாடு கந்தோருக்கு வரும்படி' அவர் தெரிவித்திருந்தார். போனதும் வேலை கிடைத்தது.

முன்பின் தெரியாதவர். போன இடத்தில் கிடைத்த சந்திப்பு. கேட்காமலே கிடைத்த உதவி. கோராமலே கிடைத்த வேலை. பார்த்தவுடனேயே எவரையும் கணிக்கும் திறமை அவரிடம் இருந்தது.

மற்ரெரு சமயம் அவர் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது சந்தித்தேன். சைக்கிள் ஒன்றுவாங்க2000 ரூபாகடனுகை அவரிடம் கேட்கச் சென்றபோது, அவர் சைக்கிளுக்குப் பணம்தர மறுத்துவிட்டார்.

என் நிலைமையை விளக்கினேன். அவர் சைக்கிள் வேண்டாம். மோட்டார் சைக்கிள் வாங்க 7000 ரூபா தரலாம் என்ருர்.

நிருபர்களுக்கு மோட்டார் சைக்கிள்தான் அவசியம் தேவை என்ருர். அவரின் பெருங்குணத்தை அப்பொழுதுதான் உணர்ந்தேன். நான் சைக்கிளே போதுமென்றேன் உடனடியாக கடன் கிடைத்தது.

யார் யார் எந்தெந்த வேலைக்குபொருத்தமானவர்கள் என்பதை அவர் நன்குபுரிந்துவைத்திருந்தார். கடுதாசி ஆலையில் தலைமைப்பதவியைஅவர் அலங்கரித்தபோது ஆயிரக்கணக்கான ஊழியர்களை வழிநடத்திய அனுபவம் இது. இப்படியான திறமை எவருக்கும் இலகுவில்கிடைத்துவிடாது.

மாகாண தினசரிகளுக்கு அவர் வழிகாட்டியாக திகழ்ந்தார். 1958 கலவரத்தின்பின் வடக்குநோக்கிவந்த தொழிலதிபர்கள் லாபநோக்குடன் பலபுதிய தொழில்களை ஆரம்பித்தபோது இவர் சேவை நோக்கத்துடன் பத்திரிகையை ஆரம்பித்தார். பலர் பயிற்சி பெற்றனர். இன்று மாகாண தினசரிகளில் பணியாற்றுபவர்கள் பலரை உருவாக்கிய பெருமை இவரையே சேரும்.

இலைமறைகாய்போல் விளம்பரத்தை விரும்பாது அமைதியான வழியில் தமிழ் சமூகத்தின் உய்விற்காக உயர்வுக்காக அயராது உழைத்தார்அப்பெரியார்

அதிபர் தங்கராசா அவர்களின் மறைவு பத்திரிகைத் துறைக்கு மட்டுமன்றி தமிழினத்திற்கு பேரிழப்பாகும். மக்களுக்காக அவர் கால் நூற்றாண்டுக்குமுன் ஆரம்பித்து வளர்த்து விருட்சமாக்கிய 'ஈழநாடு' என்றென்றும் அவரின் நினைவுச் சின்னமாக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் உள்ளங்களில் ஆண்டாண்டுகாலமாக நிலைத்துநிற்கும் என்பதில் ஐயமில்லை.

## அமரர் கே. சி. தங்கராசா

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

றணும் என்று அவர் விரும்புகிருர். இப்போ யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்தாலும், பிறகு மட்டக்களப்பு,அப்புறம் கண்டி என்று தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் எல்லாம் இப்படி பத்திரிகை ஆரம்பிக்க வேணுமென்று அவர் விரும்புகிருர்' என்று திரு. ஹரன் என்னிடம் விளக்கினுர்.

சகலரையும் ஒரேவிதமாக மதிக்கிருர் என்ற கருத்து எனக்கு மிகவும் பிடித்தமாய் இருந்தது. அதன் பேரிலேயே நான் 'ஈழநாடு'வில் சேர்ந்தேன். காலப்போக்கில் திரு. தங்கராசாவின் மனப்பான்மையும் புரியவந்தது.

★ ★

'ஈழநாடு' ஒரு நடுநிலைப் பத்திரிகையாக தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதில் அவர் மிகுந்த கவனம் எடுத்துவந்தார். இருந்தும் 1981-ம் ஆண்டு விஷமிகளால் 'ஈழநாடு' எரியுண்டபோது மிகுந்த வேதனையுற்ருர். அரசியல் கட்சிகள் ஒன்றுமாறி ஒன்ருக 'ஈழநாடு' மீது வசைபாடிய நேரங்களில், நடுநிலை பத்திரிகைகளுக்கு இதுதான் சேர்ட்டிபிகேட்' என்று சிரிப்பார்.

★ ★

1984ம் ஆண்டு 'ஈழநாடு' 25வது ஆண்டு மலர் உருவானபோது, யோகர் சுவாமிகளின் உருவம் மலரின் முகப்பில் வரவேண்டுமென்பதில் மிகுந்த அக்கறை காட்டினுர். 'ஈழநாடு' ஆரம்பகாலத்தில் அதனுடன் ஈடுபாடு கொண்டிருந்த அனைவர்பற்றியும் ஒரு செய்தி அல்லது கட்டுரை அல்லது குறிப்பு வரவேண்டுமென்று கண்டிப்பாகவிருந்தார்.

★ ★

மலைநாட்டிலும் கிழக்கு இலங்கை அப்பிரதேச மக்களுக்காவும் தமிழ்ப்பத்திரிகைகளை ஆரம்பிக்க வேண்டும் என்ற அவரது ஆசைநிறைவேறவில்லை அதற்கான திட்டங்கள் உருவான காலத்திலேயே அவர் சுகவீனமுற்ருர்.

இறுதிக்காலம்வரை ஈழநாடு' பத்திரிகையைத் தான் பெற்றெடுத்த பிள்ளைபோல் கருதி நேசித்தார். இன்று மறைந்துவிட்டார். தமிழ்மக்களின் பணிக்கெனவே அவர் உருவாக்கிய இப்பத்திரிகை தொடர்ந்து அவர் விரும்பிய பணியினை மேற்கொள்ளவேண்டும். அவர் விட்டுச்சென்ற இடத்திலிருந்து இப்பணியை இனிவருவோர் தொடர்வார்கள் என்று தமிழ் மக்கள் எதிர்பார்க்கிருர்கள் என்று கூறுவதில் தவறில்லை.

தமிழ்ப் பத்திரிகையுலகில் அவர் ஒரு விடிவெள்ளியாகத் திகழ்ந்தார். அதன் ஒளி ஒருபோதும் மங்கமாட்டாது. மக்கள் மனங்களில் என்றும் ஒளிவீசிக்கொண்டிருக்கும்.

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY

புதன்கிழமை 22-7-87

# நிதி அமைச்சருக்கு தமிழர் நலன்புரிக் கழகம் பாராட்டு

யாழ்ப்பாணம், புதன்
'தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் முறையற்ற கோரிக்கையின் மூலம் வெளிநாடுகளிலிருந்து கிடைக்கும் உதவியிலிருந்து பெருந்தொகையான பணத்தை ஆயுதப் படைக்கு ஒதுக்குவது வீண்விரயமான ஒரு செயலென நீங்கள் கண்டித்துள்ளமையை நாம் மனப்பூர்வமாக வரவேற்கின்றோம்''

இவ்வாறு தமிழர் நலன்புரிக் கழகம் நிதி, திட்டமிடல் அமைச்சருக்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது. கழகம் தனது கடிதத்தில மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெருந்தொகையான போர் வீரர்களைக்கொண்ட பாரிய படையொன்று அதன் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தேவையில்லை.

வடக்கு வடமராட்சிப்பகுதியைப் பார்க்கும்போது, அது முழுமையாக ஒரு சுடுகாடாக மாற்றப்பட்டுள்ளது. இங்கு படுகொலைகள், பொருள்கள் கொள்ளையடிப்பு. கற்பழிப்பு, கட்டடங்கள், பாடசாலைகள், கோவில்கள், தேவாலயங்கள், மசூதிகள் தகர்ப்பு போன்ற பலவாறான அட்டூழியங்கள் மேற்கொள்ளப்பட்டன.

அரச பயங்கரவாதத்தால் மேற்கொள்ளப்படும் இந்நடவடிக்கைகள் எல்லாம்ஏன்? அரச பயங்கரவாதிகள், சிங்களக் காடையர்களைக்கொண்டு வந்து இப்பகுதிகளில் குடியேற்றத் திட்டமிட்டுள்ளனரா? ஆனால் இது சாத்தியமானதல்ல. புனிதமானஎந்தவொரு சிங்களவரும் இதனை ஏற்றுக்கொள்ளமாட்டார்.

இவை யாவும் காடைத்தனமான செயல்களேயொழிய இவற்றால் இறுதியில் எதனையும் பெறமுடியாது.

இந்தக் கொடூரமான,நியாயமற்ற யுத்தம் சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்குமிடையிலானதேயொழிய, இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையிலானதல்ல என்பதை 1981 ஜனவரி முதல் 1986 டிசம்பர் வரை 14,705 அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டமை நிரூபிக்கின்றது. இது அரச மனித படுகொலைக் கொள்கையின் ஒரு பகுதியாகும்.

தமிழ் தீவிரவாதிகள் சிங்கள இனத்தை அடியோடு ஒழித்துக்கட்டவோ அல்லது தமது தாயகத்தைக் கைப்பற்றவோ விரும்பவில்லை. தமிழ் தீவிரவாதிகளின் கையில் கைதிகளாகவுள்ள சிங்களவர்களை அவர்கள் பராமரிக்கும்விதத்திலிருந்து இது கண்கூடாகவுள்ளது.

அவர்கள் தாம் அங்கீகரிக்கப்படவேண்டுமென்றே விரும்புகின்றனர். அவர்கள் தாம் சமாதானமாகவும், கௌரவமாகவும் தமது தாயகமான வடக்கு, கிழக்கில் வாழவே விரும்புகின்றனர்.

இது ஒரு புனிதமான கொள்கையல்லவா?

இந்த இனப்பிரச்னை சிறியதொரு பிரச்னையென்றே எமது கழகம் நம்புகிறது. அரசாங்கம் இரட்டை வேடம் போடாது உண்மையாகவும்,நேர்மையாகவும் அணுகி, தமிழர்களுக்கெதிரான மனித படுகொலைக் கொள்கையையும் தவிர்க்குமானால் இரண்டு மணித்தியாலங்களுக்குள் இனப்பிரச்னை தீர்க்கப்பட முடியும்.

## விறகுக்கு தட்டுப்பாடு

புங்குடுதீவு, செவ்வாய்
புங்குடுதீவுப் பகுதியில் விறகிற்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது

இப்பகுதியில்விறகிற்கு ஏற்பட்டுவரும் தட்டுப்பாட்டால் அப்பகுதியிலுள்ள பச்சை பூவரசு மரங்கள் அனைத்தும் தறிக்கப்பட்டு விறகிற்காக உபயோகிக்கப்படுகின்றன.

## வடமராட்சியில் சமூக விரோதச் சம்பவங்கள்

(நமது நிருபர்)
வடமராட்சிப் பகுதியில் சொள்ளைச் சம்பவங்களும் சமூக விரோதச் செயல்களும் அண்மைக்காலங்களில் தலைகாட்டத்தொடங்கியுள்ளன.

சிவிலுடையில் ஆயுதபாணிகளாகத்திரிபவர்களே இச்சம்பவங்களிலீடுபடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேற்றுமுன்தினம் பட்டப்பகலில் நெல்லியடிப் பகுதியிலுள்ள பல வீடுகளில் ரொக்கப்பணமும், நகைகளும் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

பிரபல கடை ஒன்றுக்குள் புகுந்த சில கொள்ளைக்காரர்கள், 'கொட்டியா வந்தது எங்கே' என்று கேட்டு அங்கிருந்தவர்களைப் பயமுறுத்தினராம். சோதனை இடுவதுபோல் புகுந்து அங்கிருந்த ரொக்கப் பணத்தை எடுத்துச் சென்றுவிட்டனராம்.

அதேசமயம் வேறொரு கடை ஒன்றுக்குள் புகுந்த அதே சிவிலுடைக் கொள்ளைக் கோஷ்டி அக்கடைக்குள்ளிருந்த இரும்புப்பெட்டியை உடைத்து பெருந்தொகையான நகைகளையும், 50 ஆயிரம் ரொக்கப் பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றதாக தெரிவிக்கப்பட்டது.

அதேபாணியில் பல வீடுகளில் கொள்ளைச்சம்பவங்கள் நடைபெற்றதைத்தொடர்ந்து குடியிருப்பாளர்கள் பலர் அச்சமடைந்துள்ளதாகவும், தங்கள் உடைமைகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

## மரண அறிவித்தல்

### இராசையா மகாலிங்கம்

(கொழும்பு, யாழ். "ராம் சேது அன் கொம்பனி" பங்காளர்)



புங்குடுதீவு 1-ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ்ப்பாணம், பிரப்பங்குள லேன், 58A, வண்ணார்பண்ணையை வசிப்பிடமாகக் கொண்டவரும், காலஞ்சென்ற இராசையா தம்பதிகளின் புதல்வரும், புங்குடுதீவு 6-ம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னையா தம்பதிகளின் மருமகனுமாகிய இராசையா மகாலிங்கம் அவர்கள் செவ்வாய்க்கிழமை (21-07-87) காலமாகிவிட்டார்.

இவர் யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், சாந்தனு, செந்தூர்வாசன், திருத்தணிசசன், சிதம்பரநாதன், செந்தில்முருகன ஆகியோரின் அன்புத் தந்தையும், றேகன் றேடர்ஸ் பங்காளர் தருமலிங்கம், காலஞ்சென்ற தில்லைநாதன், காலஞ்சென்ற இரத்தினம், அன்னலிங்கம், சபாரெத்தினம் (மேற்கு ஜேர்மனி), கமலாம்பாள், நிர்மலானந்தராணி, இராஜேஸ்வரி, கதிர்காமலிங்கம் (மேற்கு ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும், யாழ். விநாயகர் ஸ்ரோர்ஸ் சிவசாமியின் அன்புச் சகலனும், புவனேஸ்வரி, பசுபதிப்பிள்ளை, கொழும்பு வெங்கா றேடர்ஸ் அரியநாயகம், யாழ் வர்த்தகர் தம்பிராஜா, கிளிநொச்சி வர்த்தகர் சிவபாதம், தர்மபூபதி, புவனேஸ்வரி, அன்னலெட்சுமி, கனகாம்பிகை, நிர்மலாதேவி ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று புதன்கிழமை (22-07-87) அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பிற்பகல் 4-00 மணியளவில் கோம்பையன்மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்: இ. தர்மலிங்கம்.

[சி-9971]

### சுப்பையா சத்தியானந்தம் (அப்புச்சி)



சுன்னாகம் மேற்கு பருத்திக்கலட்டியைச் சேர்ந்த சுப்பையா சத்தியானந்தம் (அப்புச்சி) என்பவர் லிபியாவில் கார் விபத்தில் சிக்கி 24-6-87 அன்று அகாலமரணமடைந்துவிட்டார். அன்னார் காலஞ்சென்ற திரு, திருமதி சுப்பையா சரஸ்வதிஅவர்களினது அன்பு மகனும், செல்வராசா (யாழ் மாவட்ட உபஅலுவலகம், சுன்னாகம்), சுப்பிரமணியம் (மணியம் ஸ்ரோர்ஸ், சுன்னாகம் மேற்கு), சிறீஸ்கந்தராசா, சிவராசா (லங்கா சீமெந்து லிமிட்டெட், காங்கேசன்துறை), தங்கராசா (சவுதி அரேபியா) ஆகியோரின் அன்புச்சகோதரரும். லீலாவதி,யோகேஸ்வரி,தவராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும், வனிதா, ஜெனிதா. சுஜீதா, சுதர்சன் சுதர்சினி, கமல்ராஜ், கமலினி, கவிராஜ் ஆகியோரின் அன்புச்சித்தப்பாவுமாவார். அன்னாரின் பூதவுடல் 22-7-1987 புதன்கிழமையன்று அன்னாரது இல்லத்தில் ஈமைக்கிரியைகள் நடைபெற்று, சுன்னாகம் பொதுமயானத்திற்குத் தகனத்திற்காக பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும். இச்செய்தியை உற்றார், உறவினர்கள்' நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி 9973)

தகவல்: செல்வராசா

## கீரிமலையில் ஷெல் மூவர் படுகாயம்

யாழ்ப்பாணம், புதன்
கீரிமலையில் நேற்றுக்காலை இடம்பெற்ற ஷெல் தாக்குதலின் போது நால்வர் படுகாயமடைந்தனர்.

கீரிமலைப்பகுதியில் முகாமிட்டிருக்கும் இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் குடியிருப்புப் பகுதிகளில் விழுந்து வெடித்ததால் முருகையா மங்களேஸ்வரன் (வயது 17) கே. சுசீலன் (வயது-19) என். அஸீஸ் (வயது 26) பிரான்சிஸ் விமலன்(வயது19) ஆகியோரே படுகாயமடைந்து தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குகொண்டு செல்லப்பட்டு,பின் அங்கிருந்து யாழ். ஆஸ்பத்திரிக்கு ஆபத்தான நிலையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (கு)

## பரீட்சை குறித்து அறிவிப்பு

யாழ்ப்பாணம்,புதன்
இடைக்காடு மகாவித்தியாலயததிலிருந்து இந்த ஆண்டு க.பொ.த (சாதாரணம்) பரீட்சைக்கு விண்ணப்பிக்க விரும்புப் மாணவர்கள் புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரியில் இயங்கும் மேற்படி இடைக்காடு மகாவித்தியாலயத்துடன் எதிர்வரும் 28ம்திகதிக்கு முன்னர் தொடர்புகொள்ளவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெங்கட்ராமன் தெரிவை ஆட்சேபித்து வழக்கு

(சென்னை)
இந்திய ஜனாதிபதியாக திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவு செய்யப்பட்டது சட்ட ரீதியானதல்ல எனத் தெரிவித்து புதுடில்லி நீதிமன்றமொன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பீகார்மாநிலத்தைச் சேர்ந்த திரு. மிதிலேஷ்குமாரே இவ்வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் அண்மையில் நடந்த ஜனாதிபதிதேர்தலில்சுயேட்சை வேட்பாளராக போட்டியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஓய்வு பெற்றார்

(வவனியா)
வவனியா பிரதம அஞ்சல் அதிபர் திரு. எஸ். அரியநாயகம் 35வருடம் தபால் திணைக்களத்தில் கடமையாற்றியபின் இளைப்பாறியுள்ளார்.

மேற்படி அஞ்சல் அலுவலக ஊழியர்களினால் பிரியாவிடை வைபவம் ஒன்றும் அண்மையில் அளிக்கப்பட்டது இவ்வைபவத்திற்கு வவனியா தபால் நிலையஅத்தியட்சகர் திரு.எஸ். சிவபுரதாசன் தலைமை வகித்தார்.

## மகோற்சவம்

யாழ்ப்பாணம், புதன்
அனலைதீவு ஐயனார்கோவில் மகோற்சவம் கொடியேற்றத்துடன் 26ம் திகதி ஆரம்பமாகும். தேர்த்திருவிழா ஆகஸ்ட் 8ம் திகதி புதன்கிழமையும், தீர்த்தோற்சவம் 9ம் திகதிவியாழக்கிழமையும், பூங்காவனத் திருவிழா 10ம் திகதிவெள்ளிக்கிழமையும் நடைபெறும்.

## மணி அடித்ததால் ஏற்பட்ட நிர்க்கதி!

பூநகரி, செவ்வாய்
பூநகரி நாலாம் கட்டை இராணுவ முகாமிற்கு அரைமைல் எல்லைக்குள் அமைந்துள்ள பிரமன் தாழ்வு விநாயகர் ஆலயத்தில் கடந்த வெள்ளி கும்பாபிஷேக வைபவம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது அங்கு சென்ற நாலாம் கட்டை இராணுவத்தினர் ஏன் மணி அடித்தீர்கள் என்று கேட்டு அவ்விடததில் நின்ற பக்தர்களை கடுமையாகத் தாக்கியதோடு அனைவரையும் முகாமிற்குக் கொண்டு சென்றனர்.

அச்சமயம் இ. போ. ச. பஸ்சில் வந்த பயணிஒருவர் கோவில் பூசையில் மணி அடிக்கும் வழக்கத்தை முகாம் அதிகாரிக்கு விபரமாகக் கூறினார்.

உடனடியாக அனைவரையும் விடுதலை செய்து தங்கள் கணக்கில் கோவிலில் ஒரு பூசை செய்யும்படி தாக்கப்பட்ட கோவில் நிர்வாகியிடம் இராணுவத்தினர் நூறு ரூபா கொடுத்தனர்.

## மாநகர சபை காரியாலயம் இடமாற்றம்

யாழ்ப்பாணம், புதன்
யாழ் மாநகர சபைக் காரியாலயம் பருத்தித்துறை வீதியிலுள்ள மாநகர சபை தீயணைக்கும் படைப்பிரிவுக்கண்மையில் உள்ள தற்காலிக கட்டிடமொன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ் நகர எல்லைக்குள் புதிதாக வர்த்தக நிலையங்கள் அமைப்போர்க்கு யாழ். மாநகர சபை உதவி செய்யக் காத்திருப்பதாக யாழ், மாநகர சபை ஆணையாளர் திரு. சி. வி. கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

(வா)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1987-ம் ஆண்டு ஜூலை மாதம் 22-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/10036/81 Eelanadu. P. O. Box 49 Telegram, Eelanadu. Telephone; — 22389, 24126.